வன்முறை இல்லாத வீடுகள்

பாதுகாப்பான
போக்குவரத்து

பசியின்மை

சம ஊதியம்

எளிதில் கடன்

அநீதிக்கு
எதிரான

பெண்களுக்கெதி
ரான வன்முறை

ஆண் பெண் பாகுபாடு
இல்லை

# தமிழ்நாடு பெண்களுக்கான புதிய கொள்கை 2021 (வரைவு)

***ஒன்றிணைவோம்! நாம் விரும்பும் வளமான எதிர்காலத்தை உருவாக்குவோம்***

தமிழ்நாடு அரசு

# தமிழ்நாடு பெண்களுக்கான புதிய கொள்கை 2021

## (வரைவு)

# சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை

15 டிசம்பர் 2021

(வரைவுக் குழுவால் சமர்ப்பிக்கப்பட்டது)

உறுப்பினர்கள்

1. திருமதி த. ரத்னா இ.ஆ.ப., இயக்குனர், சமூக நல இயக்குநரகம்
2. திருமதி ஆர்.வி. ஷஜீவனா, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை
3. Dr G.N. கிருபா, HOD, Health and Social Welfare Division, SPC
4. Dr R சுஜாதா, நிலைத்தநீடித்தவளர்ச்சி, ஆலோசகர்
5. Ms. செரின்போஸ்கோ. சமூகஉளவியல்நிபுணர்
6. முனைவர்,பி, சிவகுமார், உதவி பேராசிரியர், RGNIYD
7. முனைவர். இராமஜெயம், உதவி பேராசிரியர், பாரதிதாசன்பல்கலைக்கழகம்
8. முனைவர். ஆர். கோபிநாத், முதன்மைஅறிவியலாளர், எம்.எஸ்.சுவாமிநாதன்ஆராய்ச்சிபவுண்டேசன்.

# தமிழ்நாடு பெண்களுக்கான புதிய கொள்கை 2021

## முன்னுரை

பெண்களுக்கு அதிகாரமளிப்பது என்பது பின்வரும் ஐந்து அம்சங்களை உள்ளடக்கியதாகக் கூறலாம். அவை, பெண்களின் சுயமரியாதை உணர்வை மேம்படுத்துதல், சொந்த விஷயங்களில் தங்களின் விருப்பங்களைத் தீர்மானிப்பதற்கான உரிமை,வாய்ப்புகள் மற்றும் வளங்களை அணுகுவதற்கான உரிமை,வீட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் தங்கள் சொந்த வாழ்க்கையை குறித்துமுடிவெடுக்கும் உரிமை மற்றும் சமூக நீதியை உறுதி செய்வதற்கும் சமூக பொருளாதார சமத்துவத்தை உருவாக்குவதற்கும் உகந்த சூழ்நிலை ஏற்படுத்துவதில் பெண்களின் பங்களிப்பாகும் .

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலின் அவர்கள் மதுரை மாவட்டம் பாப்பம்பட்டி ஊராட்சி கிராம சபையில் கலந்து கொண்டு கோடிட்டு காட்டிய கோட்பாடுகள் இக்கொள்கை வகுப்பதற்கான அடிப்படையாக அமைந்தது எனலாம். அதனை பின்வரும் தீர்மானத்தில் காணலாம்.
“பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு உரிய மரியாதையை அளிப்பதுடன் அவர்களின் உரிமைகளை சமமாக மதித்து அவர்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் வன்முறைகளில் ஈடுபடமாட்டேன் எனவும் அவ்வாறு ஈடுபடுவோர் மீது புகார் அளித்து பாதிக்கப்பட்டவர்களுக்கு உறுதுணையாக இருப்பேன் எனவும், வரதட்சணை இல்லாத முதாயத்தை உருவாக்குவேன் எனவும், பெண் சிசுக்கொலை மற்றும் கருக்கொலை இந்நிகழ்வுகளை தடுப்பேன் எனவும் ஒரு மனசாட்சி உள்ள குடிமகனாக எவ்வித பாலியல் வேறுபாடுஇன்றி சுதந்திரம், சமத்துவம், மற்றும் சகோதரத்துவத்துடன் வலிமையான தமிழகத்தை உருவாக்க பாடுபடுவேன் என உளமாற உறுதி அளிக்கிறேன்.”

பெண்கள் மற்றும் சிறுமியர்க்கு எதிரான வன்கொடுமைகளைத் தடுப்பது பற்றி பேசும் உலக சுகாதார அமைப்பின் RESPECTFrame Work ஐ கொண்டு, சமூகத்தில் பாலின அடிப்படையிலான வன்முறை மற்றும் குடும்பங்களுக்குள் இருக்கும் பலவிதமான வன்முறை சம்பவங்கள் நடைபெறுவதற்கான அடிப்படை காரணிகளை அடையாளம் கண்டு தனிநபர்கள் மற்றும் சமூக அமைப்புகளுடன் கூட்டாக இணைந்து அவற்றை களைவதற்கு அரசு வழிவகுக்கும்.

தனி நபர் மற்றும் பல சமூக நிலைகளில் நிலைத்த நீடித்த தாக்கம் ஏற்படுத்திட பல உத்திகள் மற்றும் செயல்பாடுகளை ஒன்றிணைத்தும்,

தற்போதுள்ள சுகாதாரம், வளர்ச்சி மற்றும் இதர துறைச் சார்ந்த திட்டங்களில் ஏற்கனவே ஏற்படுத்தபட்டுள்ள கட்டமைப்புகளை வலுப்படுத்தியும்ஒருங்கிணைத்தும்அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

## தொலைநோக்கு பார்வை

பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட்டு, பெண்கள் அனைத்து சேவைகளை பெற்றிடவும், உரிமைகளை சமமான முறையில் அணுகவும், பாகுபாட்டைக் குறைக்கவும், பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான வன்முறைகளைதடுத்தும், அவர்களின் திறன் மேம்படவும், கனவுகளை நனவாக்கவும் சம வாய்ப்புகளை தமிழ்நாடு அரசுவழங்கும்.

## இலக்கு

மாநிலத்தின் 3.2 கோடி பெண்களுக்கும் அதிகாரமளிக்கும் வகையில், பாதுகாப்பான, ஆரோக்கியமான மற்றும் தங்கள் குறிக்கோளை அடைவதற்கு முழு உயிர்ப்புடன் கூடிய சூழலை தமிழ்நாடு ஏற்படுத்தும். அனைத்துதுறைகளுக்கிடையேயான செயல்பாடுகளை ஒருங்கிணைப்பதன் மூலம், பெண்களுக்கு அதிகாரம் என்ற ஒற்றை இலக்கைநோக்கி இரு பாலினத்தவர்களையும் உள்ளடக்கிய வளர்ச்சி பாதையில் தமிழ்நாடு பயணிக்கும்.

## வழிகாட்டி கொள்கைகள்

• சுகாதாரம்,கல்வி, வேலைவாய்ப்பு, திறன் மற்றும் பயிற்சி போன்ற அனைத்து சேவைகளும் எளிதில் பெறுவதற்கான வாய்ப்புகளை மேம்படுத்துதல்
• பாலின நெறிமுறைகள் மறுகட்டமைக்கபட, அனைவரின் விருப்பங்கள், எதிர்பார்ப்புகள் மற்றும் மனப்பான்மைகளைக் கருத்தில் கொண்டு அணுகுமுறைகளில் மாற்றங்கள் ஏற்பட ஏதுவான சூழல்களை செயல்படுத்துதல்
• வளர் இளம் பெண்கள்உயர்நிலை வாய்ப்புகள் பெறஇளமைப் பருவத்திலிருந்தே உயர் வளர்ச்சித் துறைகளில் நுழைவதற்கு தயார் செய்யப்படுதல்
• பெண்கள் மற்றும் சிறுமியர்க்கு எதிரான வன்முறைகளை தடுத்தல் மற்றும் எந்த விதமான பாகுபாடுகளுமில்லாத, வன்முறையற்ற, சகிப்புத்தன்மையுள்ள ஒரு வலுவான ஒருங்கிணைந்த சமுதாய கட்டமைப்பை உருவாக்குதல்.

**முக்கிய குறிக்கோள்கள்**

இக்கொள்கை ஐந்து வருட காலத்திற்குள் செயல்படுத்தப்படும் . இதன் குறிக்கோள்கள் கீழ்கண்டவாறு:

1. வளர் இளம் பருவத்தினரிடையே ஊட்டச்சத்து குறைபாடுகள் மூலம் ஏற்படும் விளைவுகளைநேர்செய்வதுடன், இரத்த சோகை மற்றும் குறைந்த எடை போன்ற குறைபாடுகளைபாதியாக குறைப்பது.
2. ஒரு கோடி பெண்களை சுய உதவிக் குழு அமைப்பிற்குள் கொண்டு வருதல். விரிவான வலையம் (network) மற்றும் வழிகாட்டிகள் வாயிலாக தீவிர வழிகாட்டுதல் மூலம் வாழ்வாதாரநிலையிலிருந்து குறைந்த பட்சம் 1,00,000 வாழ்வாதார அமைப்புகள் நிறுவனங்களாக நிலை உயர்த்தப்படும்.
3. நகர்ப்புற மற்றும் கிராமப்புறங்களில் பெண்களிடையே டிஜிட்டல் பாலின இடைவெளியைக் குறைக்க இணைய சேவைகள் அதிகரிக்கப்படும்.
4. தரவு(Data) அடிப்படையிலான கொள்கை உருவாக்கத்தை எளிதாக்க, அனைத்து அரசுத் துறைகளும் ஆண்டுதோறும் பாலினம் வாரியாக பிரிக்கப்பட்ட தரவுகள் (Data) வழங்கும்.
5. இடைநிலையில் ஒவ்வொரு ஆண்டும் இடைநிற்றல்களை 10% குறைத்தல் மற்றும் மூன்றாம் நிலை சேர்க்கை விகிதத்தை ஒவ்வொரு ஆண்டும் 5% அதிகரித்தல்,.
6. ஒவ்வொரு ஆண்டும் குறைந்தது சமூகத்தின் பின்தங்கிய பிரிவுகளைச் சார்ந்த 1000 பெண் ஆராய்ச்சியாளர்களுக்கு குறிப்பாக அறிவியல், தொழிற்நுட்பம், பொறியியல் மற்றும் கணக்கியல் பாடங்களில் (STEM)ஆராய்ச்சி மேற்கொள்பவர்களுக்கு ஆதரவு வழங்குதல்.
7. குடும்ப சூழல் காரணமாக வேலையிலிருந்து நின்ற 10,000 பெண்களுக்கு மீண்டும் வேலையில் இணைவதற்கு வாய்ப்புகள் ஏற்படுத்தப்படும். இவர்களுடைய திறன் இடைவெளியைக் குறைப்பதற்கு பொருத்தமான தொழில்நுட்பப் பயிற்சிகள் மற்றும் விட்ட இடத்தில் மீண்டும் வேலையில் சேர்வதற்கு (lateral entry ) தக்க வாய்ப்புகள் ஏற்படுத்தி தருதல்.
8. மகளிர் வங்கியை நிறுவுவதன் மூலம் கடன் தேவைப்படும் பெண்களுக்கு கடன் கிடைப்பதற்கு வாய்ப்பு ஏற்படுத்துதல். (வாழ்ந்து காட்டு பெண்ணே).

9. அனைத்து பள்ளி மற்றும் கல்லூரி மாணவர்களுக்கும் தற்காப்புக் கலைபயிற்சி அளிப்பதன் மூலம் பெண்களின் தன்னம்பிக்கையை அதிகரித்தல், பெண்களின் சுய மதிப்பை மேம்படுத்துதல் மேலும்,

பாலின சமத்துவத்தை நோக்கி செல்வதற்கு அனைத்து பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பிற நிறுவனங்களில் பாலின பாகுபாடு இல்லாத நிலையை உறுதிசெய்தல்.

10. பெண்களுக்கு தொழில் முனைவோர் வழிகாட்டுதல் மற்றும் ஊக்குவிப்பின் மூலம் பெண்களால் நிர்வகிக்கப்படும் ஒரு லட்சம் நிறுவனங்களை உருவாக்குதல்
11. தொழில் துறையில் பெண்களின் பங்கேற்பினை அதிகரித்து மொத்த மாநில உள்நாட்டு உற்பத்தியில் (GSDP) 40% பங்கிற்கு வழிவகுப்பது.
12. பொது இடங்கள் மற்றும் அரசு துறைகள் உட்பட அனைத்து பணியிடங்களில்பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை ஏற்படுத்திடும் வகையில், உள்ளக புகார்கள் குழு மற்றும் உள்ளூர் புகார் குழு செயல்படுத்தப்படும். பொது இடங்களில் பெண்கள் பாதுகாப்பு உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கும் வகையில் பாலின பாதுகாப்பு தணிக்கை மூன்றாம் தரப்பு நிறுவனம் மூலம் மேற்கொள்ளுதல்.
13. குற்றச் சம்பவம் குறித்து தகவல் பெற்றவுடன் 24 மணி நேரத்திற்குள் முதல் தகவல் அறிக்கை (FIR) பதிவு செய்யப்படுவதை உறுதி செய்தல்.
14. பாதிக்கப்பட்ட பெண்கள் கைவிடப்பட்டதாக உணராத வகையில் மறுவாழ்வு அளிக்கப்பட்டு மற்றும் அவர்களது அடையாளம்பாதுகாக்கப்பட்டு, அவர்களுக்கு முழுமையான ஆதரவளிக்கும் அமைப்பை நிறுவுதல்.
15. ஒவ்வொரு 10 கிமீ சுற்றளவிலும் பெண்களுக்கு மனவள ஆதரவு (Emotional Support System)அமைப்புகளை உருவாகுதல்
16. பெண்கள் தலைமையிலுள்ள குடும்பங்களின் தேவையின் அடிப்படையில் சமூகப் பாதுகாப்புத் திட்டங்களின் கீழ் பயனடையச் செய்தல்.
17. இந்தியாவிலேயே பிறப்பு பாலின விகிதத்தை உயர்த்தும் (Sex Ratio) சிறந்த மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்குதல்.
18. தனியார், பொதுத்துறை பட்டியலிடப்பட்ட நிறுவனங்கள், அரசு நிறுவனங்கள், வாரியங்கள் போன்றவற்றில் 50% பெண்களுக்கு தலைமைப் பதவிகள் வழங்க ஊக்குவித்தல்
19. பெண்கள் அரசியல் களத்தில் தடையின்றி பங்கேற்க ஊக்குவிப்பதற்காக, அரசியலின் அடிப்படைகளை கற்றுக்கொள்வதற்கான ஒரு கல்வி அமைப்பு ஏற்படுத்துதல்
20. ஆறு மாதங்களுக்கு ஒருமுறை மாண்புமிகு முதலமைச்சருடன் நேரடியாக பேசி (சொல்வதைச் செய்வோம் திட்டம்) பெண்களின் குறைகளை நிவர்த்தி செய்வதற்கான தளம் அமைத்தல்.

## தற்போதைய நிலை

- பொருளாதார வளர்ச்சியில் 2006 நிதி ஆண்டு முதல் தமிழ்நாடு சராசரியாக 8.5% நிலையான சீரான வளர்ச்சியுடன் நாட்டிலேயே பொருளாதார வளர்ச்சியில் இரண்டாவது பெரிய மாநிலமாக திகழ்ந்து வருகிறது. தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பெண் தொழிலாளர்களின் பங்களிப்பு இந்திய சராசரியை விட அதிகமாகவும் குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது. கிராமப்புற பெண் தொழிலாளர்கள் பங்களிப்பு தமிழகத்தில் 35.1 விழுக்காடு உள்ள நிலையில் இந்திய சராசரியை விட 7.5% அதிகமாக உள்ளது.மனிதனின் மொத்த வேலை திறனில் பெண்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க அளவில் இருந்தும் முறையான நிலையான வேலை வாய்ப்பிற்கு அவர்கள் பங்கேற்பு என்பது பெரும் சவால் நிறைந்ததாகவே இருக்கிறது.
- 2019-20 ஆம் ஆண்டில் பெண்களுக்கு எதிரான குற்றங்களில் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் ஒரு லட்சம்பெண்களில் 14.6 பெண்கள் ஆவர்.
- 2019-20 ஆம் ஆண்டு பெண்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபட்டவர்களில் தண்டனை பெற்றவர்களின் சதவீதம் 18.3 என்ற அளவிலேயேஉள்ளது.
- 2019-20 ஆம் ஆண்டில் ஒரு லட்சம் பெண்களில் 4.3 பெண்கள் வரதட்சணை கொடுமையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.
- வரதட்சணை கொடுமை வழக்குகளில் தண்டனை பெறும் சதவீதம் 7.7 என்ற நிலையில் உள்ளது*(விரிவான தரவுகளுக்கானபுள்ளிவிவர அட்டவணை இணைக்கப்பட்டுள்ளது).*

## துறைசார்செயல்பாட்டாளர்கள்

சமூகநலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை இக்கொள்கையை செயல்படுத்தி கண்காணிக்கும் துறையாக இருக்கும். இக்கொள்கையை செயல்படுத்துவதில் அனைத்து அரசுத் துறைகள் மற்றும் நிறுவனங்கள் பங்கேற்பாளர்களாக இருப்பார்கள்: இக்கொள்கை செயல்பாடுகள் முழுமையாக ஐக்கிய நாடுகள் அமைப்பு,கல்வி நிறுவனங்கள், கல்வியாளர்கள், வங்கிகள், ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனங்கள்,

அரசு சாரா நிறுவனங்கள், பொது நல அமைப்புகள், ஊரக நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள், மற்றும் சமூக சேவை நிறுவனங்கள்இணைந்து செயல்படும்.

**தமிழ்நாடு மாநில புதியபெண்கள் கொள்கை2021**க்கான தொலைநோக்கு திட்டத்தினை அடைவதற்கு தேவையான துறைவாரி குறிக்கோள்களை உருவாக்கி திட்டங்களோடு ஒருங்கிணைத்து செயல்படுத்த வேண்டியது அனைத்து அரசுத்துறைகளின்பொறுப்பாகும். மகளிருக்கு எதிராக நிகழ்த்தப்படும் அனைத்து வன்முறை மற்றும் பாகுபாட்டிலிருந்து காத்திடும் பொருட்டு நீதி, மனித நேயம், சிக்கல்களை இனம் கண்டறிதல்,மகளிர் இடையே நிலவும்சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை அகற்றுதல் என்பதனை இக்கொள்கை அடிப்படையாக கொண்டுள்ளது. இக்கொள்கை செயல்பாடுகள் வெற்றி பெற அர்ப்பணிப்புணர்வுடன்செயல்பட தமிழகம் உறுதி பூண்டுள்ளது.இக்கொள்கையானது மாநிலத்தில் உள்ள அனைத்து மகளிருக்கும் பொதுவானது என்றாலும் கீழ்க்கண்டபிரிவினருக்கு சிறப்பு கவனத்துடன் செயல்படுத்தப்படும்.

அ)மகளிரை தலைமையாகக் கொண்ட குடும்பங்கள்(தனி மகளிர், கைம்பெண், மற்றும் கைவிடப்பட்ட ஆதரவற்ற மகளிர்)

ஆ) தாழ்த்தப்பட்ட பிரிவினைச் சார்ந்த மகளிர் (பட்டியல் வகுப்பினர்/பழங்குடியினர்)

இ)இடர்பாடுகள் நிறைந்த மற்றும் ஆபத்தான தொழில்களில் ஈடுபடும் மகளிர் (பாலியல் தொழில், குப்பை பொறுக்குவோர்,கழிவுகளை அகற்றுவோர், தெருவோர வியாபாரிகள், தலைச் சுமை வியாபாரிகள், மற்றும் பிச்சை எடுப்போர்)

ஈ)கொத்தடிமைகளான பெண்கள் (அரிசி ஆலை, செங்கல் சூளை மற்றும் பிற)

உ)மகளிர் மாற்றுத்திறனாளிகள்

ஊ) வயது முதிர்ந்த மகளிர்

எ)அமைப்புசாரா தொழில் செய்யும் மகளிர் ( வீட்டு வேலை, கட்டுமான பணியாளர்கள், தினக் கூலிகள், உப்பளத் தொழிலாளர்கள், விவசாயத் தொழிலாளர்கள், தற்காலிகதொழிலாளர்கள்)

ஏ)பணிபுரியும் மகளிர் (Formal Sectors)

**செயலாக்க உத்திகள்**


மேற்குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதல் நெறிமுறைகளை மையமாகக் கொண்டு, வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்தி,தற்போதுள்ள திறமைகளை மேம்படுத்துவதற்கான உந்துதலை அளித்து, முக்கியபங்குதாரர்களுடனான உறவை வலுப்படுத்துதல் போன்ற வழிமுறைகளை கடைபிடிப்பதன் மூலம் மகளிருக்கு உரிமைகள் பெற்றுத்தருவதில் இக்கொள்கை முதன்மையாக செயல்படும்.கீழ்கண்ட நான்கு அம்சங்களும் இவ்வழிகாட்டி நெறிமுறைகளைத் செயல்படுத்துவதற்கான ஆதாரதுண்களாக இருக்கும்.

அ)சமூகம்

ஆ)பொருளாதாரம்

இ)அரசியல்

ஈ)மனவள ஆதரவு



**அ)சமூகம்**

மகளிருக்கான அதிகாரம் அளித்தல் என்பது மகளிர் சுதந்திரத்துடனும், தன்னம்பிக்கையுடனும் , சுயமாகவும்,கூட்டாகவும் செயல்படுவது ஆகும். ஏழ்மையிலும் ஏழ்மையான நிலையில் பெண்கள் தள்ளப்படுவதற்கான சமூக கட்டமைப்புகளை மாற்றும் வகையில் பெண்களே முன்னின்று செயல்படும் வகையில் மாற்றிமைக்கப்படவேண்டும். இளம்பருவம் முதல் பெண்களை பாலின ரீதியாக சிறுமை படுத்துதலில்பெற்றோர் மற்றும் ஆசிரியர்களின் பங்கு உள்ளது.

பெண்களை அதிகாரப்படுத்துவதில் கீழ்க்கண்டவை முக்கிய பங்காற்றுகின்றன.தனிநபர்சொத்துக்கள் (நிலம், வீடு, கால்நடைகள்,சேமிப்புகள் போன்றவை), மனித இனத்தின்அனைத்துசெயற்திறனையும்பெற்றிருத்தல்(சிறந்த கல்வி

மற்றும் நல்ல உடல்நலம் போன்றவை), சமூகம்(சமூகஉடனிருப்பு, சுயஅடையாளஉணர்வு, தலைமைதொடர்பு போன்றவை) உளவியல் (தன்மதிப்பு,தன்னம்பிக்கை, மேம்பட்ட எதிர்காலத்தை எண்ணுவதும் உருவாக்க அவாவுறுதலும் போன்றவை) மேலும்,பேச்சுரிமை,அமைப்புவழிஒன்றிணைதல் மற்றும் சுய அடையாளம் ஆகியவற்றை பெண்கள் பெற்றிட பெண்களின் கூட்டுசக்தி மற்றும் கூட்டுசெயல்திறன் ஆகியனவும்முக்கிய பங்காற்றுகின்றன.

## 1.1. **கல்விமற்றும்ஆராய்ச்சி**

பெண்கள் மற்றும்சிறுமியர்க்கு கல்வி பெறுவதற்கான சமவாய்ப்புகள், பாலின பாகுபாட்டினை ஒழிக்க முன்முயற்சி மேற் கொள்ளுதல்,எழுத்தறிவின்மையை ஒழித்தல், பெண்களுக்கு இசைவான கல்வி முறையை ஏற்படுத்துதல், மாணவியர்சேர்க்கையை அதிகரித்தல் மற்றும் இடைநிற்றலை குறைத்தல்,வாழ்நாள் முழுமைக்கும் கற்றலுக்கான வாய்ப்புகள் ஏற்படுத்துதல்,தொழில், வேலைவாய்ப்புகள், தொழில் நுட்பத் திறன் ஆகியவற்றுக்கான வசதிகளை பெறும் வண்ணம் கல்வியின் தரத்தை மேம்படுத்துதல் ஆகியன உறுதி செய்யப்படும்.பாலின விகிதத்தை உயர்த்தி சமப்படுத்துதல்மற்றும் இடைநிலை மற்றும் உயர்நிலை கல்வியில் காணப்படும் பாலின இடைவெளியை குறைப்பது ஒரு முக்கியசெயல்பாட்டுக் காரணியாகத் திகழும். தற்போதுள்ள துறைசார் இலக்குகளில் மகளிர் மற்றும் சிறுமியரை பொறுத்தமட்டில் சிறப்பு கவனம் மேற்கொண்டு,குறிப்பாகபட்டியல் வகுப்பினர்/பழங்குடியினர்/இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/ சிறுபான்மையினர், முதலானவர்களிடையே பாலின பாகுபாட்டிற்கு காரணமான தொடர்ச்சியாக திணிக்கப்படும் பெண்ணடிமை கருத்துக்களை அகற்றுவதற்கும், குறைப்பதற்கும் ஏற்ற வகையில் அனைத்து கல்வி நிலைகளிலும் பாடத்திட்டம்உரியவகையில் வடிவமைக்கப்படும்.

**1.1.1** பாலினரீதியாகவேறுபடுத்தும்நிகழ்வுகளைபள்ளியிலும்இல்லங் களிலும்குறைப்பதன்வாயிலாகமாணவ மாணவியர் எதிர்பாலினருடன் எவ்வித முரண்பாடுகளும் இன்றி கருத்துப் பரிமாற்றம் மூலம் ஒருவரிடமிருந்து மற்றொருவர் கற்றுக்கொள்வது, பெண்ணுரிமைக்கெதிரான மனநிலை

மாற்றம் மற்றும் பழைய கண்மூடித்தனமான வழக்கங்களை குறைத்தல் ஆகியவை நிகழும்.இதற்கேற்ற வகையில்,மாணவ மாணவியர் இருபாலருக்கும்போட்டிகள், கைவேலை, சமையல் திறன் மற்றும் புதுமையான செயல்பாடுகள் ஆகியவவை பயிற்றுவிக்க ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

**1.1.2** இடைநிலைகல்வியிலிருந்துஇடைநிற்கும்மாணவியர்விகிதத்தை ஆண்டுக்கு10 சதவிகிதம் குறைத்து மேல்நிலைக் கல்வி சேர்க்கையில் 5 சதவீதம் கூடுதலாக மாணவியர் சேர்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் .

**1.1.3** நலிவுற்ற பொருளாதார பிரிவினைச் சார்ந்த மாணவியர்கள் தாங்கள் விரும்பும் உயர்கல்வியை படிப்பதற்கு தேவையான ஊக்கத்தொகை வழங்கப்படும்.உயர்கல்விக்காக மாணவியர் பெறுகின்ற கடனுக்கு விதிக்கப்படும் வட்டியில் குறைந்தபட்சம் 3 சதவிகித வட்டி அரசால் ஏற்கப்படும். மேலும், தமிழ் வழி கல்வி பயிலும் மாணவருக்கு கூடுதலாக 0.5 சதவிகிதம் வட்டிமானியம் வழங்கப்படும்.

**1.1.4** உயர்கல்வி பயில விரும்பும் மாணவியர்களுக்கு வேலை வாய்ப்பிற்கான வழிகாட்டுதல்கள் வழங்கப்படும். ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் ஓய்வு பெற்ற ஆசிரியர்கள் மற்றும் பேராசிரியர்களின் சேவை பெறப்பட்டு எதிர்காலவேலை/ தொழில்வாய்ப்புகள் பற்றி விவரங்கள் பகிரப்பட்டு வழிநடத்தப்படும்.

**1.1.5** உயர்நிலை தொழில்நுட்ப மற்றும் மேலாண்மை கல்விபயில மற்றும் வேலை வாய்ப்புகளுக்கான போட்டித் தேர்வுகளில் பங்கேற்பதை ஊக்குவிக்கும் வகையில் JEE,CAT, UPSC,TNPSC ஆகியவற்றிற்குஇலவச/ மானியத்துடன் கூடிய சிறப்பு பயிற்சி வகுப்புகள்நடத்தப்படும்.

**1.1.6** குழந்தை திருமணம் மற்றும் சிறார்களுக்கு எதிரான வன்கொடுமைகளை தடுப்பதற்கு, பாதுகாப்பு நடவடிக்கைகள் சரியாக உள்ளது குறித்து தணிக்கைகள் நடத்தப்படும்.பள்ளிக்கு செல்லும் வழித்தடங்களில் வன்முறை நடப்பதற்கான வாய்ப்புகள்/அச்சுறுத்தல்கள்இருப்பின் அவற்றை களைய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**1.1.7** அனைத்துஅரசுமற்றும்தனியார்கல்விநிறுவனங்கள் **(**பள்ளிமற்றும்கல்லூரி**)** தங்களது அறிவிப்புப் பலகை, இணையதளம் ஆகியவற்றில் கல்வி ஊக்கத் தொகை மற்றும் எதிர்கால வேலைவாய்ப்பு பற்றிய அனைத்து விவரங்களையும்

குறிப்பிட வேண்டியது கட்டாயமாக்கப்படும். தொடர்புடைய துறைகளில் விருதுகளை பெற்றவர்களின் விவரங்களும் குறிப்பிடப்பட வேண்டும்.

**1.1.8** பெண் ஆராய்ச்சியாளர்களுக்கு உதவும் வகையில் கடன் வசதி, அறிவுசார் சொத்துரிமை மற்றும் காப்புரிமை பெறும் வசதி மற்றும் தமது ஆராய்ச்சியைவணிக தயாரிப்புகளாக மாற்றும் வசதி ஆகியவை வழங்கப்படும்.

**1.1.9** பள்ளி மற்றும் கல்லூரிகளில் உள்ள ஆசிரியர்களுக்கு ஆலோசனை வழங்குதல் குறித்த திறன் பயிற்சி வழங்கப்படும். குறித்த காலஇடைவெளிகளில் புத்தாக்க பயிற்சியும் வழங்கப்படும்.

**1.1.10** பள்ளி மற்றும் கல்லூரிகளில் மாணவியர்களுக்கு தற்காப்புக் கலை பயிற்சி கட்டாயமாக்கப்படும்.

**1.1.11** விளையாட்டுபாடம் கட்டாயமாக்கப்படும். அனைத்து வகுப்பு மாணவியர்களும் விளையாட்டுகளில் பங்கேற்பதை உறுதி செய்யவேண்டும்.விளையாட்டுத்துறையில்சிறப்பாக செயல்படும் மாணவியர்களுக்கு சிறப்பு பயிற்சிகள் வழங்கப்படும்.

**1.1.12** பள்ளிகளில் வாழ்க்கை திறன் கல்வி இளம் பருவத்தினருக்கு வழங்கப்படும். தற்காப்பு, கலாச்சாரம் மற்றும் கலைகளை உள்ளடக்கிய உடல் வளர்ச்சி, பொதுவான உடல்நலம், பாலியல் ஆரோக்கியம் மற்றும் உடல்நலத் தூய்மை மற்றும்சுகாதாரம் உள்ளிட்டவை அடங்கிய வாழ்க்கை திறன் கல்வி பாடதிட்டங்களின் கீழ் சேர்க்கப்படும். இந்த பாடத்திட்டத்தை நடத்த எதுவாக ஒவ்வொரு வாரமும் (ஒரு மாதத்தில் குறைந்தது 4 காலங்கள்) குறிப்பிட்ட காலங்கள் (period) ஒதுக்கப்படலாம், இப்பாடத்திட்டதிற்கென ஒதுக்கப்படும் காலம் வேறு எந்த காரணத்திற்காகவும் மாற்றப்படாது.

**1.1.13** பெண்ணியம் சார்ந்த துறைகளில் ஆராய்ச்சி மேற்கொள்கின்ற பெண் ஆராய்ச்சியாளர்களுக்கு கூடுதல் ஆதரவு வழங்கப்படும்.

**1.1.14** கல்வி மற்றும் திறன் பயிற்சிகளில் தாங்கள் விரும்பும் வண்ணம் கல்வி வாய்ப்புகள் மற்றும் திறன் பயிற்சி பெறுவதில் ஆண் பெண் பாகுபாடின்றி அனைவரும் சமமான வாய்ப்பினைப் பெறுவது உறுதி செய்யப்படும்.

**1.1.15** அரசுநிறுவனங்கள்/துறைகள், கல்வி நிறுவனங்கள், ஆராய்ச்சி நிறுவனங்களால்மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் மற்றும் கள

ஆய்வுகள் தொடர்பான விவரங்கள் இணையமின்னணு வடிவிலான தொகுப்பாக ஏற்படுத்தப்படும்.

**1.1.16** பாலின அடிப்படையில் அல்லாத (non-gender stereotyped categories) திறன் வளர்ப்பு பயிற்சியில் பங்கேற்கும் மாணவியர்களுக்கு சிறப்பு உதவித்தொகை வழங்கப்படும்.

**1.1.17** தொழிற்பயிற்சி மற்றும் தொழில்நுட்பப் பயிற்சி தேர்ச்சி பெற்ற மாணவியர்களுக்கு தொழில் பழகுனர்(Apprenticeship) பயிற்சிக்கு இணைமானியம் மாநில அரசால்வழங்கப்படும்.

**1.1.18** பள்ளி பாடத்திட்டங்களில் தொழிற்திறன்கள் குறித்து பயில திட்டமிடப்பட்ட நிகழ்வுகள் நடத்தப்படும்.

**1.1.19** தொழிலிலிருந்து/ வேலையிலிருந்து நின்ற மகளிருக்கு உயர்திறன் மேம்பாடு அல்லது மீள்பயிற்சி (upskilling or reskilling courses)ஆகியவற்றை வழங்கி மீண்டும் உரிய / உயரிய நிலையில்(lateral entry or reentryat a higher level ) வேலையில் தொடர வழி செய்யப்படும்

**1.1.20** கணினி மற்றும் இணையதள சேவை குறித்த அறிவினை (Digital literacy)மேம்படுத்த கிராமப்புறங்களில் உள்ள சமுதாய வளபயிற்றுனர்கள் (CRP/CPC) மூலம் சமூக ஊடகம் முதல் இணையதளங்கள் கையால்வது குறித்த (social media to internet browsing)பயிற்சிகள் வழங்கப்படும்

## 1.2 சுகாதாரம்,தூய்மை மற்றும் ஊட்டச்சத்து

மகளிர் மற்றும் சிறுமியர்க்கு எதிராக நிகழ்த்தப்படும் பாலின பாகுபாடு மற்றும் பாரபட்சம் அவர்களது நல்வாழ்வு மற்றும் உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கின்றது. நல்வாழ்வுக்கான அரசு திட்டங்கள்/சேவைகள் மற்றும் விவரங்களை தடைகள் ஏதுமின்றிபெறுவதை தமிழக அரசு உறுதி செய்யும்.தடைகள் எனப்படுவன: பொது இடங்களுக்கு சுதந்திரமாக செல்வதில் மீதான கட்டுப்பாடுகளை உள்ளடக்கியிருக்கலாம்; முடிவெடுக்கும் அதிகாரத்திற்கான அணுகல் இல்லாமை; குறைந்த எழுத்தறிவு விகிதம்; சமூகங்கள் மற்றும் சுகாதார வழங்குநர்களின் பாரபட்சமான அணுகுமுறைகள்; பெண்கள் மற்றும் சிறுமிகளின் குறிப்பிட்ட சுகாதாரத் தேவைகள் குறித்து சுகாதாரப் பாதுகாப்பு மற்றும்

சுகாதார அமைப்புகளிடையே போதிய பயிற்சி மற்றும் விழிப்புணர்வு இல்லாமை போன்றவையாகும்.

1.2.1 இனப்பெருக்கம் மற்றும் பாலியல் ஆரோக்கியத்திற்கு அப்பாற்பட்ட வளர்இளம் பருவத்தினரின் உடல்நலப் பிரச்சினைகளை விரிவாகத் தீர்க்க, வளர்இளம் பருவத்தினரின் நேய மருத்துவகம் (AFHCs) (**தோழி உனக்காக**) நிறுவப்பட்டு, அத்தகைய மருத்துவகங்களை சுகாதார மேம்பாட்டு மையங்களாக மாற்றப்படும்.

1.2.2 கருத்தடை, குடும்பக் கட்டுப்பாடு முறைகள் மற்றும் சட்டப்பூர்வ மற்றும் பாதுகாப்பான கருக்கலைப்பு உரிமை உட்பட பெண்களின் இனப்பெருக்க உரிமைகளையும் அங்கீகரிக்கும் பாலின மற்றும் சுகாதார உத்தியை அரசு பின்பற்றும்.

1.2.3 பள்ளி மற்றும் கல்லூரிகளில் பெண்களுக்கான வருடாந்திர கட்டாய உடல்நலப் பரிசோதனை நடத்தப்படும், இதில் இரத்தப் பரிசோதனைகள் (இரத்த சோகை), புற்றுநோய் மற்றும்தொற்றற்ற நோய்கள், மாதவிடாய் மற்றும் பெண் உடல் சார்ந்த பிரச்சினைகள் போன்ற சோதனைகள் அடங்கும்.

1.2.4 பெண்கள் வேலை செய்யும் இடங்களில்சுகாதார அணையாடை (napkin) வழங்கும் இயந்திரங்கள், எரியூட்டிகள், குப்பைத் தொட்டிகள், கழிவு காகிதம் போன்ற வசதிகள் வழங்கப்படும்.

1.2.5 அனைத்துப் பொது இடங்கள், அரசு அலுவலகங்களில் பெண்களுக்கு உகந்த கழிப்பறை வசதிகள் வழங்கப்படும். துப்பட்டா/பையை வைத்திருப்பதற்குத் தேவையான கொக்கிகள், நாப்கின்கள் வைக்க இடம் மற்றும் செயல்படும் தாழ்ப்பாள் ஆகியவற்றைக் கொண்ட கழிப்பறைகள் அமைக்கப்படும்.

1.2.6 நலவாழ்வு மற்றும் சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் நோயாளிகளை பராமரிப்பவர்கள், உடல்நலக்குறைவால் பாதிக்கப்படுவதற்கு இருமடங்கு அதிக வாய்ப்புள்ளது. நிறைவு செய்யப்பட்ட ஒவ்வொரு ஆறு மாதசேவைக்கு ஒரு வாரம் கட்டாய விடுப்பு எடுக்க அவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

1.2.7 சுகாதார சீர்முறைகள்/நெறிமுறைகள் (Protocols) குறித்த அறிவை வல்லுநர்களிடையே மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். அவர்களின் தனித்துவமான சிக்கல்கள் மற்றும் இடர்பாடுகள் தீர்க்கப்படும்.

1.2.8 பெண்களுக்கு பிறக்கும் போது ஆயுட்காலம் அதிகமாக இருப்பதைக் கருத்தில் கொண்டு, சமூக அடிப்படையிலான நோய்த்தடுப்பு சிகிச்சையை வழங்குவதன் மூலம் பெண்களுக்கான நோய் தடுக்கும், நோய்தீர்க்கும் மற்றும் மறு நலவாழ்வு உள்ளிட்ட முதியோர் சேவைகள் பொருத்தமான அரசு மற்றும் பொது-தனியார் துறை பங்கேற்புடன் வலுப்படுத்தப்படும்.

1.2.9 பெண்களின் உடல், உணர்வுகள் மற்றும் மன ஆரோக்கியத்திற்கு பூப்பெய்துதல் முதல் மாதவிடாய் ஒழிவு (Menarche to Menopause / M to M) வரையிலான ஹார்மோன் ஏற்ற இறக்கங்கள் காரணிகளாகின்றன. அதிக கவனம் தேவைப்படும் இக்காலகட்டத்தைக் கருத்தில் கொண்டு ஆஸ்டியோபோரோசிஸ், இருதய நோய்கள், மனச்சோர்வு போன்றவை ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்ய சுகாதாரத் துறை பொருத்தமான திட்டங்களை செயல்படுத்தும்.

1.2.10 தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம், 2013-ன்படி, அதிக ஊட்டச்சத்து குறைபாடுகள் உள்ள குடும்பங்களுக்கு குறிப்பாகச் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் அதிக ஊட்டச்சத்து மற்றும் பாதுகாப்பான உணவு கிடைத்திட ஏதுவாக கூடுதல் பருப்பு வகைகள், சிறுதானிய வகைகள் (millets), வெல்லம் போன்றவை பொது விநியோக முறை (PDS) மூலம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

1.2.11 பாலின விகிதத்தை மாற்றும் பாலினத் தேர்வு, கருக்கொலை, சிசுக்கொலை ஆகியவை நடைபெறும் இடங்களை அடையாளம் கண்டு அவ்விடங்களில் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

1.2.12 ஊட்டச்சத்து குறைபாடுகளுக்கு பெண்கள் அதிகம் ஆட்படுவதால்அவர்களுக்கு சரியான ஊட்டச்சத்து கிடைத்திட அதிக முன்னுரிமை அளிக்கப்படும். பருவப் பெண்களின் தேவைகள் முதல் வயதான பெண்களின் நிலை வரை, அவர்களின் வாழ்க்கைச் சுழற்சியின் அனைத்து நிலைகளிலும் தேவையான ஊட்டச்சத்து உட்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்த கல்வியறிவு வழங்கப்படும்.ஆரோக்கியமான கரு வளர்ச்சிக்காக, பிறப்புக்கு முந்தைய பராமரிப்பு (ANC) முதல் மற்றும் பிரசவத்திற்குப் பிந்தைய பராமரிப்பு (PNC) வரை ஒவ்வொரு கட்டத்திலும் கவனம் செலுத்தப்படும். குழந்தை பிறந்த பிறகு முதல் 1000 நாட்களுக்கு ஊட்டச்சத்து பராமரிப்பில் கவனம் செலுத்தி, ஊட்டச் சத்து குறைபாட்டின் தலைமுறைகளுக்கு இடையேயான சுழற்சியை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் மற்றும் சேவைகள் பலப்படுத்தப்பட்டு, மாநில அளவில் முறையாக கண்காணிக்கப்படும். சமூக வள

பயிற்றுனர்கள் (ஊட்டச்சத்து) உருவாக்கப்பட்டு இச்செயல்பாடுகளை சமுதாயஅளவில் கண்காணிக்க ஈடுபடுத்தப்படுவார்கள்.

1.2.13 இளம்பருவப் பெண்களின் ஊட்டச்சத்து மற்றும் சுகாதார நிலையை மேம்படுத்துவதில் சிறப்பு கவனம் செலுத்தப்படும்.குடும்பத்திற்குள் பெண்களுக்கான ஊட்டச்சத்து பாகுபாட்டை முடிவுக்குக் கொண்டுவர பொருத்தமான உத்திகள் வகுக்கப்படும்.

1.2.14 குழந்தைகளின் பாலினம் வாரியாக (மாவட்ட வாரியான தரவு) ஊட்டச்சத்து குறைபாடு பற்றிய அடிப்படை தரவு மற்றும் பிறக்கும் போது எடையின் தரவுகளின் (பாலின வாரியாக) அடிப்படையில் செயல்பாடுகளை வகுத்து ஊட்டச்சத்து குறைவில்லா குழந்தைகள் என்ற நிலையை எய்திட மக்கள் நல்வாழ்வு மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் ICDS துறைகளால் அவ்வப்போது கண்காணிக்கபட்டு உறுதி செய்யப்படும்.

1.2.15 ஊட்டச்சத்து குறைபாட்டைத் தடுப்பது மற்றும் குறைப்பது, இளம் குழந்தைகளின் உயிர்வாழ்வு மற்றும் மேம்பாட்டுக்கான நடவடிக்கைகளை ஊக்குவித்தல் போன்றவற்றில் ICDS& சுகாதாரப் பணியாளர்கள் - ANMகள், AWWs, ASHAs மற்றும் AWHs குறிப்பாக இவர்கள் ஒருங்கிணைந்து ஒரு குழுவாக அதிக சமூக ஈடுபாட்டுடன், முக்கியமான சமூக தொடர்பு மையங்களில் கவனம் செலுத்தி செயல்படுவது உறுதி செய்யப்படும். கிராம சுகாதாரம், சத்துணவு மற்றும் சுகாதாரக் குழு (Village Health, Nutrition and Sanitation Committee) இந்தப் பணிக்கு பொறுப்பாகும், மேலும் இது வட்டார மருத்துவ அலுவலரால் அவ்வப்போது கண்காணிக்கப்படும்.

**முதியோர் பராமரிப்பு (Geriatric care)**

1.2.16 வயதானவர்களில் குறிப்பாக பெண்கள் மிக அதிகமாக பாதிக்கப்படக்கூடிய நிலையில் உள்ளார்கள். மூத்த குடிமக்கள் மீதான தேசியக் கொள்கை 2011 க்கு இணங்க, முதியோர் உடல்நலப் பாதுகாப்பில் சிறப்பு கவனம் செலுத்தப்படும். நோய்த்தடுப்பு,சிகிச்சை மற்றும் மறு-நலவாழ்வு உள்ளிட்ட முதியோர் சேவைகள் பொருத்தமான அரசு மற்றும் பொது-தனியார் மூலம் பலப்படுத்தப்படும்.

1.2.17 முதியோர்களுக்கு தேவையான உணர்வுபூர்வமான மற்றும் உளவியல் ரீதியிலான ஆதரவை வழங்குவதையும் பாதுகாப்பை உறுதி செய்வதையும் அரசு கவனிக்கும். தனிப்பட்ட நபர்

அடிப்படையிலான தேவை மற்றும் மதிப்பீடுகள் அடிப்படையில் சமூதாய அடிப்படையிலான ஆதரவு அமைப்புகள் நிறுவப்படும்.

## 1.3 சமூக வகைபாடுகளின் பகுப்பாய்வு (Inter-sectionality)

1.3.1 திட்டங்கள் தீட்டும்போதும், தரவுகள் திரட்டப்படும் போதும் பாதிக்கப்படக்கூடிய அனைத்து தரப்பு பெண்களுக்கும் முன்னுரிமை அளிக்கப்படும். குறிப்பாக, ஆதரவற்ற மற்றும் சிறுபான்மையின பெண்கள், மாற்றுத்திறனாளிகள், திருநங்கைகள், பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள், கைவிடப்பட்டபெண்கள், விதவைகள், கவனிக்கப்படாத வயதான பெண்கள் ஆகியோருக்கு அனைத்து துறைகளாலும் தங்கள் திட்டங்களில் முன்னுரிமை அளிக்கப்படும்.

1.3.2 மாற்றுத்திறனாளி இளம் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு பள்ளிகளில் ஒரே மாதிரியான பாலினம் மற்றும் உறவுமுறைக் கல்வி அளிக்கப்படும். இதனால் அவர்கள் பாலியல் சுரண்டலுக்கு ஆளாகாமல் இருப்பதோடு, தனக்கு தகுந்த தேர்வுகளைச் செய்வதற்கு போதுமான தகவல் உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

1.3.3 மாற்றுத்திறனாளி பெண்களுக்கு அவர்கள் விரும்பினால் குழந்தைகளைப் பெற்றுக்கொள்ளும் உரிமை உட்பட இனப்பெருக்க மற்றும் பாலியல் ஆரோக்கியத் தேர்வுகளைச் செய்யவும் உரிமை உண்டு.

1.3.4 மாற்றுத்திறனாளி பெண்களுக்கு இனப்பெருக்க சுகாதார சேவைகள்மற்றும் குடும்பக் கட்டுப்பாடு மற்றும் சிகிச்சையின் போது பாகுபாடு காட்டப்படுவதைத் தடுக்கும் வகையில், மாற்றுத் திறனாளிபெண்களுக்கு உகந்த சூழல் வழங்கப்படும்.

1.3.5 ஜே.ஜே. சட்டம் 2015ன் கீழ், மாற்றுத்திறனாளி மற்றும் ஆதரவற்ற குழந்தைகளுக்கான சிறப்புக் கல்வியாளருடன் கூடிய பகல் பராமரிப்பு மையங்கள்நிறுவப்படும்.

1.3.6 பாலின முதிர்ச்சி, பாலினம் மற்றும் பாலின அடையாள ஆய்வு, பிறக்கும் போது ஒதுக்கப்பட்ட பாலினத்தின் பாலின அடையாளத்துக்கு (binary cis-genders) இணங்காத இளம் பருவத்தினருக்கு சிறப்பு கவனிப்பும் கவனமும் தேவை. அவர்களில் பலர் தங்கள் குடும்பங்களை விட்டு வெளியேறுகிறார்கள் அல்லது இந்த காரணத்திற்காக வீட்டை விட்டு வெளியேற்றப்படுகிறார்கள். குற்றவாளிகளின் குழந்தைகள், பாலியல் தொழிலாளிகளின் குழந்தைகள், புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் குழந்தைகள், திருநங்கைகள் மற்றும் சமூகத்தால் அடிக்கடி புறக்கணிக்கப்பட்ட

அல்லது புறக்கணிக்கப்படும் இளம் பருவத்தினரின் குழந்தைகள் போன்றவர்களுக்கும் இதே நிலைதான். இவர்களுக்கு தனியாக சிறப்பு கவனம் செலுத்தி திட்டங்களில் முன்னுரிமை அளிக்கப்படும்.

1.3.7 மாநிலஅரசால் வழங்கப்படும் உரிமைகள் மற்றும் சலுகைகளை பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் எளிதில் பெறுவதை உறுதி செய்யப்படும்.

## 1.4 வன்முறை ஒழித்தல்

பெண்களுக்கெதிரான வன்முறையானது அவர்களை உடல் ரீதியாகவும்,பாலியல் மற்றும் இனப்பெருக்கம் ரீதியாகவும் முக்கியமாக மன ஆரோக்கியத்தை மோசமாகப் பாதிக்கிறது. இதனால் குடும்பச் சூழல் பாதிப்பது மட்டுமின்றிபொது இடங்கள் மற்றும் நிறுவனங்களிலும் பாதிப்பு ஏற்படுகிறது. நெருங்கிய உறவினர்களால் ஏற்படும் வன்முறை மற்றும் பாலியல் வன்முறை ஆகியவை திட்டமிடப்படாத கர்ப்பம், தூண்டப்பட்ட கருக்கலைப்பு (பெரும்பாலும் பாதுகாப்பற்ற சூழ்நிலைகளில் நடத்தப்படுகின்றன) மற்றும் எச்ஐவி உட்பட பாலியல் ரீதியாக பரவும் நோய்த்தொற்றுகளுக்கு வழிவகுக்கும். நெருங்கிய உறவினரால் ஏற்படும் வன்முறைகளால் கருச்சிதைவு, குறைகால பிறப்புகள் மற்றும் கர்ப்ப காலத்தில் வன்முறை நிகழ்ந்தால் குறைவான எடை கொண்ட குழந்தை பிறப்பதற்கான சாத்தியக்கூறுகளையும் அதிகரிக்கிறது. வன்முறைக்கு ஆளான பெண்களுக்கு மனச்சோர்வு, மனக்கவலை, மது அருந்துதல் மற்றும் தற்கொலை முயற்சி போன்றவற்றின் ஆபத்தும் அதிகம்.

பாலின சமத்துவம் குறித்த நிலையான வளர்ச்சி இலக்கு 5 – ன் கீழ் இலக்கு 5.1 பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாகுபாட்டை முடிவுக்குக் கொண்டுவருவதில் கவனம் செலுத்துகிறது மற்றும் இலக்கு 5.2 பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான அனைத்து வகையான வன்முறைகளையும் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்பது இலக்காக கொண்டுள்ளது.

1.4.1 கருவறை முதல் கல்லறை வரையிலான பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான வன்முறைகளையும் ஒரு முழுமையான கண்ணோட்டத்துடன்அரசு தனது முயற்சிகளை ஒருங்கிணைக்கும். கரு முதல் மூப்பு வரை பெண்கள் எதிர்கொள்ளும் வன்முறையானது குழந்தை திருமணம், வீடு, பொது இடங்கள் மற்றும் பணியிடங்களில் நீள்கிறது. இக்கொள்கை பல்வேறு பங்குதாரர்களின் ஆதரவுடன்

சட்டங்கள், திட்டங்கள் மற்றும் சேவைகளின் கலவையின் மூலம் வன்முறை மற்றும் அத்துமீறல்களை அடையாளம் கண்டு எதிர்த்துப் போராட வழி வகுக்கும். தற்போதுள்ள உதவி மையம் (helpline), ஒன் ஸ்டாப் மையங்கள், தங்குமிடங்கள், சட்ட ஆலோசனை மையங்கள், ஆலோசனை மற்றும் ஆதரவு வழிமுறைகள் ஆகியவற்றை ஒருங்கிணைக்கும் பொதுவான தளம் உருவாக்கப்பட்டு ஒவ்வொரு வழக்கும் அதன் இறுதி முடிவு எட்டும் வரை கண்காணிக்கப்படும்.

1.4.2 பாலின அடிப்படையிலான வன்முறைக்கு சகிப்புத்தன்மையில்லை என்பதும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடும் வழக்கமான குற்றவாளிகளைத் தடுக்க அவர்களை கண்டறிந்து புறக்கணித்து வெளியேற்றி அவர்கள் காவல் துறையிடம் ஒப்படைக்களப்படும் என்பதையும் வலியுறுத்தி அனைத்து உள்ளாட்சி அமைப்புகளாலும் ஒருமனதாக தீர்மானம் இயற்றப்படும்.

1.4.3 அனைத்துக் கல்வி நிறுவனங்களும் பாலின நட்புச் சூழலைக் கொண்டிருக்க வேண்டும் மற்றும் பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான வன்முறைகளைக் கடுமையாகப் பாவித்து நடவடிக்கை எடுக்கவேண்டும். பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பெண்களுக்கு பாலியல் துன்புறுத்தல் மற்றும் அச்சுறுத்தல் தொடர்பான பிரச்சனைகள் இல்லாத நல்ல ஆதரவான சூழல் நிலவிட நடவடிக்கை எடுக்கப்படும். உள் புகார்க் குழுக்கள் உருவாக்கப்படும். இவை நடைமுறையில் செயல்பட்டு பெண்களுக்கு எதிரான வன்முறைகளுக்கு தீர்வு காணும்.

1.4.4 பள்ளிகள்/கல்வி நிறுவனங்கள் பாலின சமத்துவத்திற்கான பணிக்குழுவை அமைப்பதை உறுதி செய்ய வேண்டும். இக்குழு பெண்கள் மற்றும் சிறுமிகளுக்கு எதிரான பாகுபாடு மற்றும் வன்முறையைக் கையாளும் திறன் கொண்டதாக அமையும். பாலின சமத்துவ விளைவுகளின் அடிப்படையில் பணிக்குழுவின் செயல்பாடுகள் மதிப்பீடு செய்யப்படும். பாலர் ஊராட்சிகள் இப்பணியில் தீவிரமாக ஈடுபடுத்தப்படும்.

1.4.5 பாலின சமத்துவம் மற்றும் உணர்திறன் ஆகியவை ஆசிரியர் பயிற்சியின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும் மற்றும் பாலின சமமான விதிமுறைகளை உறுதி செய்வதற்காக "பாலின பாடத்திட்டம்" அணுகுமுறை பின்பற்றப்பட்டு அவ்வப்போது மதிப்பாய்வு செய்யப்படும். பாலின நிலைப்பாடுமற்றும்

வன்முறையை முறியடிக்கும் வகையில் சிறுவர்கள் மற்றும் ஆண்களை இதுகுறித்த உரையாடல்களில் ஈடுபடுத்துவதும் இதற்கான தக்க விவாத தளங்களை உருவாக்கவும் கல்வி நிறுவனங்கள் ஊக்குவிக்கப்படும்.

1.4.6 ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த அனைத்துக் குழந்தைகளையும், பள்ளிக்கு வெளியே இருக்கும் தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த பெண்குழந்தைகள் அனைவரையும் பள்ளிக்கு அழைத்துச் செல்வதிலும், பள்ளியில் தக்க வைப்பதிலும் தமிழ்நாடு அரசு அதிக கவனம் செலுத்தும்.மேலும், கல்வியில் உயர்தரத்தை அடையவும், பெற்ற தரத்தை நிலைநிறுத்தவும் கடுமையாகப் பாடுபடும். அவர்களின் ஆரம்ப பள்ளிகளில். கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயாவின் நோக்கம் கல்வியில் பின்தங்கிய தொகுதிகளில் (EBBs) குறிப்பாக 19 வயதுக்குட்பட்ட இளம்பெண்களை உள்ளடக்கியதாக விரிவுபடுத்தப்படும், இதனால் அவர்கள் பள்ளிக் கல்வியை முடிக்க முடியும், தொடக்கக் கல்வி மற்றும் இடைநிற்றலில் காணப்படும் சவாலை தடுக்க முடியும்.

1.4.7 பொது இடங்களில் பெண்களின் பாதுகாப்பை அரசு உறுதி செய்யும்.பொது இடங்களில் நல்ல வெளிச்சம் உள்ளனவா போன்றவை கண்கானிக்கப்படும். உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் சம்பந்தப்பட்ட துறைகள் இதற்கு பொறுப்பாகும். சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையால் ஒவ்வொரு வருடமும் மூன்றாம் தரப்பு பாதுகாப்பு தணிக்கை நடத்தப்படும்.தணிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள அம்சங்கள் சீர்செய்யபட்டுள்ளனவா என்பது அடுத்த தணிக்கை அறிக்கையுடன் இணைத்து கண்கானிக்கப்படும்.

1.4.8 அனைத்து காவல் நிலையங்களிலும் ஆலோசகர்கள் மற்றும் மகளிர் காவல் குழு (police beat) இருக்க வேண்டும் மற்றும் காவல் நிலையங்களை அணுகுவதை ஊக்குவிக்கும் வகையில் அங்கு பாலின உணர்திறன் மிக்க சூழல் இருக்க வேண்டும்.

1.4.9 ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்பிலும், பாதிக்கப்படக்கூடிய பெண்களுக்கு ஆதரவளிப்பதற்கும், பாலின அடிப்படையிலான வன்முறை வழக்குகளில் புகாரளிக்க வசதியாக ஒரு மகளிர் காவல்தன்னார்வலரை காவல் துறை நியமிக்கும். அவ்வாறு நியமிக்கப்பட்ட நபரின் பெயர் மற்றும் தொடர்பு விவரங்கள் எளிதாக அணுகுவதற்கு முக்கிய இடங்களில் வைக்கப்படும்.

1.4.10 பெண்களுக்கு எதிரான வன்முறையை அரசு ஒருபோதும் ஆதரிக்காது. குற்றவாளிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.பெண்கள் உதவி மையம், காவல் நிலையம் அல்லது அதிகாரப்பூர்வமாக அங்கீகரிக்கப்பட்ட தளங்களில் பதிவுசெய்யப்பட்ட அனைத்து வழக்குகளுக்கும் ஒற்றை கண்காணிப்பு அமைப்பை அரசு அமைக்கும்.

1.4.11 பாதிக்கப்பட்ட பெண்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் பாதிக்கப்பட்டவர்/சாட்சி பாதுகாப்பு திட்டங்களை சூழ்நிலையின் தேவைக்கேற்ப அரசு ஏற்படுத்தும்.இவை வடிவமைக்கப்பட்ட நிலையான செயல்பாட்டு நெறிமுறைகளின்படி அமையும்.

1.4.12 குடிப்பழக்கம் காரணமாக குடும்ப வன்முறையில் ஈடுபடும் குற்றவாளிகள் பொருத்தமட்டில், உள்ளூர் காவல் துறையுடன் இணைந்து சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையால் அவர்களை போதை ஒழிப்பு திட்டத்தில் சேர்த்து ஆலோசனை அமர்வுகள் நடத்தப்படும்.

1.4.13 பணியிடத்தில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல் தடுப்பு (தடுப்பு, தடை மற்றும் நிவர்த்தி) சட்டம், 2013-ன் படி (POSH) பத்து அல்லது அதற்கு மேற்பட்ட பணியாளர்களைக் கொண்ட அனைத்து நிறுவனங்களும் உள்ளக புகார் குழு அமைப்பது சட்டப்பூர்வமான கடமையாகும். இக்குழுக்கள் முழுமையாக செயல்படுவது உறுதி செய்யப்படும்.

1.4.14 இடர் எச்சரிக்கை ஒலி (Safety Alarm) எழுப்பும் சாதனங்கள் / கருவிகள் / அபாய பொறிகள் தடுப்புகளாக செயல்படும் மற்றும் பொது இடத்தில் பெண்கள் பாதிக்கப்படும் போது இவை அருகிலுள்ள காவல் நிலையங்களுக்கு தகவல் தெரிவிக்கும் மற்றும் அவசரகால பதில் ஆதரவு அமைப்பு (ERSS) ஆக செயல்படலாம்.

1.4.15 போதைப்பொருள் பிரச்சனையை அறிவியல் பூர்வமாகத் தீர்க்க, ஐந்தாம் வகுப்பு முதல் கல்லூரி வரை கல்விப் பாடத்திட்டத்தில் மது மற்றும் போதைப்பொருள் பற்றிய விழிப்புணர்வு சேர்க்கப்படும்.

## 1.5 சமூக பாதுகாப்பு

தகுதியுள்ள அனைவருக்கும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் எளிதில் கிடைக்கப்பெறுவதை அரசு உறுதி செய்யும்.

1.5.1 தலைமுறைகளுக்கு இடையேயான வறுமை குழந்தைகளைகுறிப்பாக, சிறுமியரை தாக்குகிறது.

குழந்தை திருமணத்திற்கு கட்டாயப்படுத்துவதற்கான பொதுவான காரணங்களில் வறுமையும் ஒன்றாகும்.எனவே,தங்கள் மகள்களுக்கு விரைவில் திருமணம் செய்து வைக்க விரும்பாத ஏழை குடும்பங்கள் அல்லது சமூகங்களுக்கு சமூக ஆதரவு அமைப்புகளை ஏற்படுத்துவதற்கு அரசு போதுமான நடவடிக்கைகளை எடுக்கும்.

1.5.2 பாலின இயக்கவியலை மாற்றுவதில் நீண்டகால அமைப்பு ரீதியான மாற்றத்திற்கு தலைமுறைகளுக்கு இடையேயான ஆரோக்கியமான உரையாடல்கள் வழி வகுக்கும். இவற்றை ஊக்குவிக்க அரசு நடவடிக்கை எடுக்கும். இதனால் குழந்தை திருமணம் போன்ற தீங்கு விளைவிக்கும் சமூக விதிமுறைகளை முடிவுக்குக் கொண்டுவர முடியும்.தங்களின் எல்லைக்குள் எந்த விதமான பெண்களை பாதிக்கக்கூடிய சமூக விதிமுறைகளும், குழந்தைத் திருமணங்கள் உட்பட இல்லை என்பதை உறுதிசெய்து, அவற்றின் நிலையைத் தொடர்ந்து பராமரிக்க முன்வரும் கிராமஊராட்சி / பேரூராட்சி/ நகராட்சி/ மாநகராட்சி ஆகிய அமைப்புகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் அரசு ஊக்கமளிக்கும்.

1.5.3 சமூதாய மட்டத்தில் இளம்பெண் குழுக்களை உருவாக்குவதற்கு அரசு வழிவகை செய்யும். இவை இளம் பெண்களின் வாழ்க்கையைப் பாதிக்கும் விஷயங்களை விவாதிப்பதற்கு, சவால்களைக் கண்டறிவதற்கு, பாதுகாப்பான சூழலில் தரவுகளின் அடிப்படையிலான தீர்வுகளைக் கண்டறிவதற்கு ஒரு வாய்ப்பைவழங்கும்.

1.5.4 அனைத்து திருமணங்களையும் கட்டாயமாக பதிவு செய்தல் வேண்டும். மதத் தலங்களில் நடைபெறும் திருமணங்களும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளால் முறையாகப் பதிவு செய்யப்படும்.

1.5.5 பாலின சமத்துவம் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்க, நகர்ப்புற மற்றும் கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகள் அளவில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் உள்ள உரிமைகள் பற்றிய விழிப்புணர்வை அதிகரிக்க பாலின மன்றங்களை (Gender clubs) உருவாக்கபடும். பாலின மீறல்கள் நிகழாமல் இருப்பதை உறுதி செய்யும் காவலர்களாகவும் இவை உருவாகும்.

### 1.6 சமூக பாதுகாப்பு

தமிழ் நாட்டில் விதவைகள், கைவிடப்பட்ட பெண்கள், விவாகரத்து செய்யப்பட்ட பெண்கள், முதிர்கன்னிகள், திருமணமாகாத தாய்மார்கள் போன்ற ஒற்றைப் பெண்களின் தலைமைத்துவக் குடும்பங்கள் (நகர்ப்புறங்களில் 13% மற்றும் கிராமப்புறங்களில் 15%) அதிக எண்ணிக்கையில் உள்ளன. அனைத்து ஒற்றை மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்களும் அனைத்து சமூக பாதுகாப்பு நடவடிக்கைகளின் கீழ் தகுதியுடைவர்களாக கருதப்படும்.

1.6.1 அனைத்து ஒற்றை மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கும் MGNREGS இன் கீழ் 50 வேலை நாட்கள் கூடுதலாக வேலை வழங்கப்படும்.
1.6.2 ஒற்றை மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தங்கள் உரிமைகள், காப்பீடு மற்றும் பிற சமூக பாதுகாப்பு திட்டங்களை முழுவதுமாக பெறுவது உறுதி செய்வதற்காக தனியாக ஒரு வாரியம் உருவாக்கப்படும்.
1.6.3 ஆதரவற்ற இல்லங்களில் வளர்க்கப்படும் பெண் குழந்தைகள் ஒரு பொதுப் பதிவேட்டின் கீழ் பதிவு செய்யப்படுவார்கள்.18 வயதாகும் போது முதல் பட்டதாரி உதவித்தொகை, திருமண உதவி போன்ற அனைத்து அரசாங்கத் திட்டங்களுக்கும் தகுதி பெறுவார்கள். இதனால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு முகாம்களில் பங்கேற்பது, திறன் பயிற்சி வழங்குவது ஆகியவற்றில் முன்னுரிமை அளிக்கப்படுவதோடு, குறைந்தபட்ச மாதாந்திர உதவித்தொகையான ரூ. 1000 மற்றும் அவர்கள் விரும்பும் எந்த ஒரு சேவை இல்லத்திலும் தங்குவதற்கான வாய்ப்பும் வழங்கப்படும்.
1.6.4 பிறவி குறைபாடுகள் உள்ள குழந்தைகள், ஆட்டிசம் குழந்தைகள் மற்றும் உடல் ஊனமுற்ற குழந்தைகளை கவனித்துக் கொள்வதற்கு அதிக செலவு மற்றும்நேரம் தேவை. எனவே, இக்குழந்தைகளை முறையாக கவனித்து கொள்ள ஏதுவாக அவர்களின் தாயின் வங்கிக் கணக்கில் சிறப்பு ஓய்வூதியம் வழங்கப்படும்.
1.6.5 ஒற்றைப் பெண்கள் தனி குடும்பமாகக் கருதப்படுவார்கள் மற்றும் குடும்ப அட்டை பெற தகுதி பெறுவார்கள்.

**1.7 சட்டம்**

1.7.1 மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து கிராமஊராட்சி / பேரூராட்சி/ நகராட்சி/ மாநகராட்சி அளவில் உள்ள சமூகத்தில்நலிவுற்ற பிரிவினருக்கு சட்ட உதவி வழங்கவும்,

நீண்ட கால தகுதியான நிலுவை வழக்குகளை தீர்வு செய்யமாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவில் உள்ள இலவச சட்ட உதவி மையங்களுக்கு (DLSA) பரிந்துரைக்கப்படும்.

1.7.2 பாலின அடிப்படையிலான வன்முறை (GBV) தொடர்பான வழக்குகளை விரைவாகக் கண்காணிப்பது குறித்து நீதித்துறையுடன் கலந்தாலோசித்து அரசு உறுதி செய்யும்

1.7.3 நீதித்துறை கல்லூரி (Academy) பெண்கள் அமைப்புகளுடனும், பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்பான துறைகளுடனும் இணைந்து பெண்களின் பாதுகாப்பிற்கு பொருந்தும் தற்போதைய சட்டங்கள் (சட்டம் என்ன சொல்கிறது?) குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும்.

1.7.4 ஊராட்சி அளவில் பெண்களுக்கான பாதுகாப்புச் சட்டங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த சமூக வள பயிற்றுனருக்கு (CP/CRP)நீதித்துறை கல்லூரி (Academy)பயிற்சி அளிக்கும்.

1.7.5 பெண்களுக்கு சமமான சட்டங்களை பரிசீலிக்கும் அதிகாரம் நீதித்துறைக்கு உள்ளது.நில உரிமை மற்றும் வாரிசு உரிமைகள், போன்ற பெண்களை பாதிக்கும் சட்டங்கள் மறுஆய்வுக்கு எடுத்துக்கொள்ளலாம். எனவே, பெண்கள் மற்றும் சிறுமியரின் சட்டத் தேவைகளை நிவர்த்தி செய்யும் சட்ட சீர்திருத்த நிரலை செயல்படுத்த கூட்டுமுயற்சி மேற்கொள்ளப்படும். இவை சிறந்த விளைவுகளுக்கு வழிவகுக்கும்.

1.7.6 மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு (SLSA), மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு (DLSA), மாநில மகளிர் ஆணையம், குழந்தைகளுக்கான மாநில ஆணையம் மற்றும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை போன்ற தொடர்புடைய நிறுவனங்களின் ஒருங்கிணைப்புக்கான வழிமுறைகளை அரசு உருவாக்கும். பெண்களுக்கு ஏதுவான வகையில்எளிதாக நீதி கிடைக்கப்பெறும் வகையில் இவ்வமைப்புகள் வலுப்படுத்தப்படும். சேவை இல்லங்களில் தங்கியுள்ள பெண்களுக்கு தேவையான சட்ட உதவிகளை வழங்குவதற்காகSLSA, DLSA போன்ற ஆதார நிறுவனங்களுடன் தொடர்பை உருவாக்கும்.

1.7.7 தற்போதுள்ள சட்டங்கள், கொள்கைகள் மற்றும் திட்டங்களில் உள்ள இடைவெளிகளை நிவர்த்தி செய்ய, குறிப்பாக தற்போதுள்ள சட்டங்களை வலுப்படுத்தவும், புதிய சட்டங்களை அறிமுகப்படுத்தவும், மாநில சட்ட ஆணையத்தின் மூலம் மாநில அரசு அவ்வப்போது சட்ட

மறுஆய்வு மற்றும் நிர்வாக சீர்திருத்தங்களை மேற்கொள்ளும்.

1.7.8 தரவு அமைப்புகளை ஒழுங்குபடுத்துவதற்கும், பிரிக்கப்பட்ட தரவைச் சேகரிப்பதற்கும், பல்வேறு தரவு ஆதார அமைப்புகளின் (Census, NFHS, NSS, NCRB, MoSPI) மதிப்பாய்வு மூலம் தரவைத் தொகுப்பதற்கும், பெண்களுக்கான விரிவான தரவுத்தளத்தை உருவாக்குவதற்கும் ஆதார அடிப்படையிலான கொள்கை உருவாக்குவதற்கும் மாநில அரசு முயற்சிகளை மேற்கொள்ளும்.

## 1.8 ஊடகம்

1.8.1 வெகுஜன ஊடகங்களில் பாலின சமத்துவம்: அதாவது அச்சு மற்றும் மின்னணு ஊடகங்கள், விளம்பர உலகம், திரைப்படத் துறை மற்றும் சமூக ஊடகங்கள் ஆகியவற்றில் ஆசிரியர் பதவிகளில் பெண்கள் இருப்பதை 50% அதிகரிப்பதன் மூலம் பாலின சமத்துவம் ஊக்குவிக்கப்படும்.

1.8.2 பாலின கட்டமைப்புகள், நம்பிக்கைகள் மற்றும் நெறிமுறைகளை மாற்றும் வகையில் பாலின உணர்திறன் அறிக்கையிடலை எளிதாக்குவதற்கு தொழில்நுட்பப் பயிற்சி மற்றும் திறன் மேம்பாட்டை வழங்குவதற்காக பெரிய நகரங்களில் குறைந்தபட்சம் பெண்களுக்கான ஊடக மையம் (women media center) அமைக்கப்படும். இதழியல் மற்றும் வெகுஜன ஊடகப் படிப்புகளை ஊக்குவித்தல் மற்றும் சமத்துவமான பணிச்சூழலைக் கடைப்பிடிப்பதை உறுதிசெய்வதன் மூலம் ஊடகத் துறையில் பெண்களின் நுழைவை இது ஊக்குவிக்கும்.

1.8.3 பெண்களை இழிவுபடுத்தும் வகையில் அல்லது பழமைவாத கண்ணோட்டத்துடன் அல்லது பிரதிநிதித்துவப்படுத்தாத வகையில், பெண்களை பாலின உணர்வுடன் மற்றும் பாரபட்சமற்ற வகையில்அனைத்து வகையான ஊடகங்களிலும் சித்தரிப்பதை தமிழ்நாடு அரசு ஊக்குவிக்கும். தனியார் துறை ஊடக வலையமைப்புகள் சுய-கட்டுப்பாட்டு வழிமுறைகளுடன் பெண்களை உரிமையளிக்கும்/ அதிகாரமளிக்கும் வகையில் சித்தரிக்க ஊக்குவிக்கப்படும்.

1.8.4 பெண்களுக்குப் பயனளிக்கும் வகையில் இணையம், முகநூல், ட்விட்டர் மற்றும் மொபைல் போன் தொடர்பு மற்றும் தகவல் அமைப்புகள் போன்ற சமூக ஊடகப் பயன்பாடுகளைப் பயன்படுத்துவதை அரசு ஊக்குவிக்கிறது.

அதே நேரத்தில் சைபர் கிரைம் தலையீடுகள் மூலம் பெண்களின் கண்ணியம் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்ய போதுமான பாதுகாப்புகளை வழங்கும்.

1.8.5 ஊடகங்களில் பயன்படுத்தப்படும் மொழியின் வகை/தன்மை உள்ளிட்ட பெண்களுக்கு அதிகாரமளிக்கும் கருத்துக்களைக் குறைத்து மதிப்பிடும் எந்தவொரு ஊடகக்கருத்தும், இது அரசால் விளம்பரப்படுத்தப்படவில்லை அல்லது பரிந்துரைக்கப்படவில்லை என்ற மறுப்பு / டேக் லைனைக் (tag line) கொண்டிருக்க வேண்டும்.மேலும் இது தொடர்பான புகார்கள் அல்லது குறிப்புகள்அரசிற்கு அனுப்பலாம். இதுபோன்ற கருத்துக்களை அவ்வப்போது மதிப்பாய்வு செய்ய மாநில அரசு ஒரு குழுவை அமைக்கும்.

1.8.6 பாலின உணர்திறன் மற்றும் பாலினத்திற்கு ஏற்ற சொற்கள்/மொழிகளைப் பயன்படுத்துவதில் பொதுமக்களிடையே ஊடகங்கள் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். பெண்களுக்கு எதிரான வன்முறைச் சம்பவங்களைப் பற்றி நடுநிலையான செய்தியளிக்க வேண்டும், அத்துடன் பாதிக்கப்பட்டவரின் அடையாளம் எந்த வகையிலும் வெளிப்படுத்தப்படக்கூடாது.பெண்களுக்கான பாதுகாப்புச் சட்டங்களுக்கு முரணான காட்சிகள்/அறிக்கைகள்/ பெண்களின் உரிமைகளுக்கு எதிரானவை ஊக்குவிக்கப்படமாட்டாது மற்றும் சம்பந்தப்பட்டவர்களுக்கு கடுமையான தண்டனை வழங்கப்படும்.

1.8.7 சட்டத்திற்கு புறம்பான காட்சிகள் கதையின் ஒரு பகுதியாக இருந்தால், அது தவறு என்று இணைக்கப்பட்ட சட்ட விதிகள் திரையில் பிரதிபலிக்க வேண்டும் அல்லது அச்சில் இருந்தால் பக்கத்தின் கீழ் பகுதியில் எழுத வேண்டும். (எ.கா. வரதட்சணை பற்றிய விவாதம் அல்லது உரையாடல் இருந்தால் - அது சட்டப்படி தவறு என்றும் சம்பந்தப்பட்டவர்கள் சட்டப்படி தண்டிக்கப்படுவார்கள் என்றும் அல்லது ஒரு பெண் தாக்கப்பட்டால், உதவி மைய எண் காட்டப்படவேண்டும். இவை விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கையாகவும் அமையும்)

1.8.8 பெண்கள் தொடர்பான சட்டங்களும் உரிமைகளும் குறித்த விழிப்புணர்வை ஊடகங்கள் ஏற்படுத்த வேண்டும்.

## 1.9 உட்கட்டமைப்பு

1.9.1 மாற்றுத்திறனாளி பெண்கள் மற்றும் சிறுமியர் எளிதாக நடமாடும் வகையில் உட்கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும்.

1.9.2 போதைக்கு அடிமையானவர்களை மீட்க நவீன சிகிச்சை மற்றும் மறுவாழ்வு உட்பட அனைத்து வசதிகளுடன் மையங்கள் அமைக்கப்படும்.

1.9.3 வேலை நிமித்தமாக பயணம் செய்யும் பெண்கள் அல்லது வேலை வேண்டி நேர்காணல்களில் கலந்துகொள்ள வெளியூர் சென்று தங்க நேரிடும் போது தங்கும் விடுதிகள் தேவைபடுகிறது. உள்ளாட்சி அமைப்புகளால் இவ்வசதிகள் வழங்கப்படும். இதுபோன்ற தங்குமிட வசதிகள் பாதுகாப்புத் தரங்களின்படி தரமானதாகவும், பெண்கள் தங்குவதற்கு ஏற்றதாகவும் அமைந்துள்ளதா என்பதை அரசால் ஏற்படுத்தப்படும் கூட்டு ஆய்வுக் குழு உறுதி செய்யும்.

1.9.4 பாலின தணிக்கை மூலம் உள்கட்டமைப்பு திட்டங்களின் வடிவமைப்பு, திட்டமிடல் மற்றும் இடம் ஆகியவற்றில் முன்னுரிமைகளை அமைப்பதில் பெண்களின் கருத்துகளுக்கு முதலிடம் கொடுக்கப்படும்.

1.9.5 சுகாதாரம், கல்வி மற்றும் சமூக-பொருளாதாரப் பாதுகாப்பு போன்ற பிற அடிப்படைச் சேவைகளைத் தவிர, கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் தனித்து வாழும் பெண்களுக்கு அதிகம் தேவைபடுவது வீட்டுவசதியாகும். எனவே வீட்டுவசதி போன்ற திட்டங்களில்,எவர் உதவியுமின்றி தனியாக வாழும் பெண்கள் சிறப்புப் பிரிவினராக (திருமணமாகாதவர்கள், விதவைகள், கைவிடப்பட்டவர்கள், பிரிந்தவர்கள் மற்றும் விவாகரத்து செய்யப்பட்டவர்கள்) கருதி அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

1.9.6 அனைத்து வகையான போக்குவரத்து அமைப்புகளும் பெண்களுக்கு பாதுகாப்பானதாகவும் பயணிக்க உகந்ததாகவும் இருக்க தக்க வசதிகள் செய்யப்பட வேண்டும். பேருந்துகளில் முதல் பாதி இருக்கைகள் பெண்களுக்கு ஒதுக்கப்படும். முன் வாயில் வழி, நுழைய / வெளியேற பெண்கள் மட்டுமே பயன்படுத்துவர்.

1.9.7 பொதுப் போக்குவரத்தில் தொலைதூர இடங்கள் / நகரங்களுக்கு பயணிக்கும் பெண்கள் விரும்பிய இடத்தில் இறங்கவோ ஏற்றவோ செய்யலாம். பொதுப் பேருந்து நிறுத்தமாக இல்லாமல் இருப்பினும் இம்முறை கடைபிடிக்க வேண்டும்.

1.9.8 பொதுவாக பொதுப் போக்குவரத்தை நம்பியிருக்கும் தெருவோர வியாபாரிகளுக்கு வசதியாக, பெரிய பைகள்,

கூடைகள், பெரிய பாத்திரங்கள் போன்றவற்றை வைக்க, தனியாக பேருந்துகள் (அனைத்து வகையான போக்குவரத்துகளும் அடங்கும்) இடவசதியுடன் பயன்படுத்தப்படும்.

2. **பொருளாதாரம்**

2.1 தொழில் மற்றும் சேவைத்துறைகளின் வளர்ச்சிக்கு பெண்களின் பங்கு மிக முக்கியமானது. பல்வேறு தொழில் துறைகளில் பெண்கள் அதிகமாக பங்கேற்க தொழிலாளர் சட்டம், சமூக பாதுகாப்பு மற்றும் பிற ஆதரவு சேவைகள் ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களுக்கு விரிவான ஆதரவு வழங்கப்படும். பெண்கள் தொழிற்சாலைகளில் இரவு பணி சுழற்சி (Night Shift) வேலை செய்வதற்கும், பாதுகாப்பு, போக்குவரத்து போன்றவற்றுக்கான ஆதரவு சேவைகளுடன் கூடிய உகந்த சூழலை ஏற்படுத்துவதற்கும் தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

2.2 உற்பத்தியாளர்களாக, விவசாயம் மற்றும் அதைச் சார்ந்த துறைகளில் பெண்கள் முக்கியப் பங்கு வகிப்பதால், தேவையான பயிற்சி, விரிவாக்கப்பணிகள் மற்றும் பல்வேறு திட்டங்களின் பலன்கள் பெண்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு அவர்களைச் சென்றடைவதை உறுதிசெய்ய ஒருமுகப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்படும். மண் மற்றும் விதை பாதுகாப்பு, சமூக காடு வளர்ப்பு, பால்வள மேம்பாடு மற்றும் விவசாயத்துடன் தொடர்புடைய தோட்டக்கலை, சிறு கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, மீன்வளம் போன்ற பிற தொழில்களில் பெண்களுக்கு பயிற்சி அளிப்பதற்கான திட்டங்கள் விவசாயத் துறையில் உள்ளன. பெண்களுக்கு அதிகமாக பயனளிக்கும் வகையில் இவை விரிவுபடுத்தப்படும். சிறிய அளவிலான பெண் காய்கறி விவசாயிகள், தங்கள் காய்கறி பொருட்களை சந்தைக்கு கொண்டு செல்வதில் தங்கள் லாபத்தை இழக்கின்றனர், எனவே உள்ளூர் அரசு பேருந்துகளில் அத்தகைய பொருட்களை கொண்டு செல்ல மானிய போக்குவரத்து கட்டணம்வழங்கப்படும்.

2.3 நீர்நிலைக் குழுக்களில் உறுப்பினர் சேர்க்கை மற்றும் விவசாய நோக்கங்களுக்காக தண்ணீர் விடுவித்தல் உள்ளிட்ட பணிகள் மேற்கொள்ளும் நீர்நிலைகளின் நிர்வாககுழுக்களில் பெண்களுக்கு சமமான பிரதிநிதித்துவம் அளிக்கப்படும். நீர்நிலைகளில் இருந்து பெருக்கப்படும் உயிரிகளை பெறுவதில் விவசாயப் பெண் தொழிலாளர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். விவசாயக் கூட்டுறவுகள் மற்றும் அத்தகைய தொழில்சார் நிறுவனங்களில் பெண்களுக்கு 50% இடஒதுக்கீடு வழங்கப்படுவதுடன், தலைமை பதவிகளிலும் 50% இட ஒதுக்கீடு வழங்கப்படும்.

2.4 பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் மற்றும் பிற பாரம்பரிய வனவாசிகள் (வன உரிமைகளை அங்கீகரித்தல்) சட்டம் 2007-இல் வன உரிமைகளைப் பயன்படுத்துவதற்கான நிர்வாகக் குழுக்களில் பெண்கள் சம விகிதத்தில் இடம் வகிப்பர்.
2.5 பெண் விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் சிறு வனப் பொருட்களையும் விறகுகளையும் பயன்படுத்த அனுமதி கொடுக்கப்படும்.
2.6 செடிகொடிகள் குறித்த பெண்களின் பாரம்பரிய பாதுகாப்பு நடைமுறைகள் பற்றிய அறிவு அங்கீகரிக்கப்பட்டு, வனப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு திட்டங்களில் ஒருங்கிணைக்கப்படும்.
2.7 பெண் விவசாயிகளின் உற்பத்தியை அதிகரிக்கவும், நுண்ணீர் பாசனம், நிலம் மற்றும் மண் நீர் பாதுகாப்பு நடைமுறைகளில் பெண் விவசாயிகளுக்கு தொழில்நுட்ப மற்றும் நிதி உதவிக்காக 50% அளவுக்கு பொது முதலீடுகள்,HYV அதிக உற்பத்தித்திறன்வாய்ந்த விதைகள் மற்றும் பிற உள்ளீடுகளில் உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் உள்ளடங்கிய பொது மானியங்கள் வழங்கப்படும்.
2.8 கல்வி நிறுவனங்கள், தனியார் நிறுவனங்கள், பொதுத்துறை நிறுவனங்கள், தங்கள் நிறுவனத்திற்குள் ஏக்கர் கணக்கில் பயன்படுத்தப்படாத நிலங்களை வேலி அமைத்து, விவசாயம் செய்ய பெண் விவசாயிகளுக்கு நீண்ட குத்தகைக்கு நிலத்தை வழங்கவும் அல்லது அவர்களின் குழந்தைகள் விவசாயம் செய்ய ஊக்குவிக்கபடுவர்.அதன் மூலம் அவர்கள் கற்கும்போதே சம்பாதிக்கலாம். விளைபொருட்களை தங்கும் விடுதிகளில் உள் நுகர்வுக்குப் பயன்படுத்தலாம் அல்லது உள்ளூர் சந்தைகளில் விற்கலாம் மற்றும் இவை அனைத்திற்கும் கல்வி நிறுவனங்களில் உள்ள மாணவர்களால் நடத்தப்படும் தொழில்முனைவோர் பிரிவு முன்னிலை வகிக்கலாம்.
2.9 விவசாயம் செய்யப்படாத நிலங்களை குத்தகைக்கு விடுவது அல்லது விற்பனை செய்வது போன்றவற்றில் மகளிர் கூட்டுறவு சங்கங்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
2.10 தொழில் ரீதியான பிரிவு மற்றும் பாலின ஊதிய இடைவெளி 50% குறைக்கப்படும்.
2.11 பெண்கள் தொழிலாளர் கூட்டுறவு மற்றும் கூட்டுப் பண்ணையை, குறிப்பாக நிலமற்ற மற்றும் விளிம்புநிலை பெண் தொழிலாளர்களை (Marginal Women Labour)ஊக்குவிக்கும் வகையில் திட்டங்கள் உருவாக்கப்படும். அறுவடைக்குப் பிந்தைய செயலாக்கம், சந்தைப்படுத்துதல், கால்நடை வளர்ப்பு, வனவளம் போன்ற பண்ணை சாராத செயல்பாடுகளில் கூட்டுறவுகள் ஊக்குவிக்கப்படும்.
2.12 மண்புழு உரம் மற்றும் நுண்ணுயிர் உரங்கள் உற்பத்தி, தோட்டப் பொருட்கள் (ம) நாற்றங்கால் மற்றும் தரமான விதைகள் தயாரித்தல்

ஆகியவற்றில் சிறப்புத் திட்டங்கள் மூலம் பெண் விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்கள் ஊக்குவிக்கப்படுவார்கள். இந்த அம்சங்களில் பெண் விவசாயிகள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு தேவையான மூலதன முதலீடு வழங்கி, சிறப்புப் பயிற்சித் திட்டங்கள் நடத்தபடும்.

2.13 பெண் விவசாயிகள் ஊட்டச்சத்து நிறைந்த பயிர்களை உற்பத்தி செய்ய ஊக்குவிக்கப்படுவார்கள்.அவை உள்ளூர் நுகர்வை அதிகரிக்கின்றன, மேலும் அதிக வருமானம் பெறவும் வாய்ப்புகள் ஏற்படுத்துகின்றன. இச்செயல்பாடுகளில் ஈடுபடும் பெண் விவசாயிகள் குழுக்களாக ஒருங்கிணைக்கப்படுவர். இந்தப் பயிர்களின் அறுவடைக்குப் பிந்தைய செயலாக்கம் ஊக்குவிக்கப்பட்டு, 50% விளைபொருட்கள் (ICDS) ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகளில் விநியோகம் செய்வதற்கும் பயன்படுத்துவதற்கும் கொள்முதல் செய்யப்படும்.

2.14 குடும்பத்தில் பெண்களின் ஊதியமில்லாத உழைப்பின் சமமற்ற நிலை, பொருளாதாரத்தில் பெண்களின் பங்களிப்பைக் குறைத்து மதிப்பிடுவதற்கு காரணமாக உள்ளது. பொருளாதார மற்றும் சமூக மதிப்பின் அடிப்படையில் பெண்களின் ஊதியமில்லாத பணியின் பங்கை அரசு அங்கீகரிக்கும். வீட்டு வேலைகளில் பாலின சமத்துவமின்மையை மதிப்பிடுவதற்கும், ஒருங்கிணைக்க தகுந்த உத்திகளை மேற்கொள்வதற்கும் அவ்வப்போது ஆய்வுகள் மூலம் உண்மையான நேரத்தையும் பங்களிப்பையும் மதிப்பிடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும். முக்கிய திட்டங்களுடன் இணக்கமான நேர (flexi timings) வேலைகள், நேரத்தைச் சேமிக்கும் தொழில்நுட்பங்கள், உள்கட்டமைப்பு, குழந்தைகள்/பெற்றோர் பராமரிப்புச் சேவைகள்/ காப்பகங்கள் (Crèches) மற்றும் குழந்தை பராமரிப்பு/பெற்றோர் விடுப்பு ஆகியவற்றின் மூலம் பெண்களின் வேலை நேரத்தை பயனுள்ளதாக மாற்றிட கூடுதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2.15 கட்டுமானத்துறை,செங்கல் சூளை, வீட்டு வேலை,தோட்டங்களில் பணிபுரிபவர்கள்போன்ற புலம்பெயர்ந்த பெண்களுக்கு அவர்களின் உரிமையைப் பாதுகாப்பதோடு, பயனுள்ள தொழில் பாதுகாப்பு வழிமுறைகள் உருவாக்கப்படும், பொது விநியோக அட்டைகள், கழிவறை வசதிகள் மூலம் சுகாதாரம், உள்ளூர் அங்கன்வாடிகள் மற்றும் பள்ளிகளில் குழந்தைகள் சேர்க்கை, தாய் மற்றும் குழந்தை பராமரிப்பு உள்ளிட்ட வழக்கமான சுகாதார பரிசோதனைகள் போன்றவை கிடைத்திட வழிவகை செய்யப்படும்.

2.16 மகப்பேறு நலச் சட்டம் மற்றும் பணியிடத்தில் பெண்களுக்கு ஏற்படும் பாலியல் துன்புறுத்தல் (தடுப்பு,) போன்ற கட்டாயச் சட்டங்களுக்கு இணங்குவதை உறுதி செய்வதற்காக, சமூக நலன்

மற்றும் பெண்கள் அதிகாரமளிக்கும் துறை, தொழில்கள் மற்றும் தொழிலாளர் துறை மற்றும் பிற தொடர்புடைய துறைகளுடன் இணைந்து ஒரு கூட்டு கண்காணிப்பு நெறிமுறையை அரசு ஏற்படுத்தும். தடை மற்றும் பரிகாரம் சட்டம், நிறுவனத்தால் வழங்கப்படும் பெண் ஊழியர்களின் உரிமைகள் மற்றும் நன்மைகளை காட்சிப்படுத்துதல். மகப்பேறு மற்றும் பிரசவத்திற்குப் பிந்தைய நன்மைகள், குழந்தை பராமரிப்பு வசதிகள், நெகிழ்வு நேரம் (Flexi timings) மற்றும்வீட்டுவசதி, பெண்களின் உற்பத்தித்திறனை ஊக்குவிக்கும் ஏற்பாடுகள் செய்யப்படும்.

2.17 அனைத்து பெண் ஊழியர்களுக்கும் அவர்களின் மாதவிடாய் ஒழிவு/நிற்கும் காலத்தில் (menopause) விடுப்பு அளிக்கப்படும். இதை ஒரு வருடகால மகப்பேறு விடுப்புடன் இணைக்கப்படும். மகப்பேறு விடுப்பு முழுவதையும் பெறாத பெண்கள், தங்கள் வாழ்க்கையின் போது மாதவிடாய் ஒழிவு/நிற்கும் கால விடுப்பைத் துய்க்கலாம். இது மகப்பேறு விடுப்புடன் இணைக்கப்பட்டு அதிகபட்ச ஒருங்கிணைந்த வரம்பான ஒரு வருடத்திற்கு மட்டுமே அளிக்கப்படும்.

2.18 தற்செயல் விடுப்பு (CL) அல்லாமல் சிறப்பு நோய்வாய்ப்பட்ட விடுப்பு வகைக்கு மாதம் ஒன்றுக்கு தொடர்ச்சியாக 2 நாட்களுக்குத் பெண் பணியாளர்கள் மட்டும் தகுதி பெறுவார்கள். ஈடு செய்யும் விடுப்பாக இது வழங்கப்படும். மாதவிடாய் நிற்கும் வயதை அடையும் வரை இது பொருந்தும்.

2.19 எந்தவொரு பல்கலைக்கழகம்/அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் பணிபுரியும் துறையுடன் தொடர்புடைய தாங்கள் விரும்பும் எந்தப் படிப்பையும் படிக்க பெண் பணியாளர்களுக்கு வாய்ப்பு வழங்கப்படும் மற்றும் வெற்றிகரமாக முடித்தவுடன் அவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படும். பாடத்திட்டம் காலம் ஒரு வருடத்திற்கு குறைவாக இருக்கக்கூடாது.

2.20 ஆண் குடும்ப உறுப்பினர்கள் குறிப்பாக கணவர், சகோதரர் அல்லது தந்தையின் அங்கீகாரம் இல்லாமல் பெண்களுக்கு கடன் தற்போது வழங்கப்படுவதில்லை. இந்த நிலையை மாற்றி அனைத்து வகையான கடன் தேவைகளுக்கும் பெண்களுக்கு பிணையில்லா கடன் (Collateral free) வழங்க வேண்டும்.

## 2.2 திறன் வளர்ப்பு

2.2.1சம வாய்ப்புகள், நிதி மற்றும் தங்குமிட ஆதரவுடன் பெண்கள் விரும்பும் எந்தப் பகுதியிலும் திறன் பயிற்சியை அரசு அளிக்கும். இந்த பயிற்சியில் வழங்கப்படும் ஆளுமை மேம்பாடு மற்றும் தனிப்பட்ட சுயமாற்றம் ஆகியவைசுயமாக

வணிகத்தை நிர்வகிக்க அவர்களுக்கு நம்பிக்கை அளிக்கிறது. இப்பயிற்சி மையங்கள் சந்தையின் தேவைக்கேற்ப திறன்களை மேம்படுத்தும் பள்ளிகளாக செயல்படும்.

2.2.2தொழில்நுட்பத் துறையில் உள்ள மாணவர்களுக்கு புதிய மற்றும் வளர்ந்து வரும் துறைகளில் குறைந்தபட்சம் 50% வாய்ப்புகள் மற்றும் உயர்தர திறன்கள் வழங்கப்படுவதை அரசு உறுதி செய்யும்.

2.2.3பெண்கள் மற்றும் சிறுமியர்க்கு குறிப்பாக தொழில் இடைவெளியில் இருந்தவர்களுக்கு திறன் மேம்பாட்டிற்கான வாய்ப்புகளை அரசு கிடைக்க செய்யும்.

2.2.4தொழிற்கல்விமுடித்தபெண்களுக்குபழகுநர்பயிற்சிஊக்கத் தொகைஅவர்களைஊக்குவிக்கும்பொருட்டு

2.2.5வேலைக்கு செல்வதை எளிதாக்குதல்: தொழிலாளர் சந்தையின் முறைசாரா தன்மை மற்றும் மாறும் இயக்கவியல் ஆகியவை பெண்களை இளம் பருவத்தின் பிந்தைய கட்டங்களில் (18 வயதுக்கு அருகில் உள்ளவர்கள்) வேலைக்குசெல்வதிலிருந்து தடுக்கின்றன. பாடத்திட்டத்தில் காலஞ்சார்ந்த தொழில்நுட்ப திறன்களை ஒருங்கிணைப்பதற்கான வழிகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும்.மேலும் பாதிப்புக்கு எளிதில் ஆளாகக்கூடிய சமூகங்களில் உள்ள இளம்பெண்கள் கல்வி முடித்து பணிக்கு செல்வதை ஊகுவிக்கப்படும் விதம் தங்கள் படிப்புகளைத் தொடர ஊக்கத்தொகை வழங்கப்படும்.

## 2.3 வேலைவாய்ப்பு

2.3.1 குறிப்பிட்ட துறைகளில் பெண்கள் மற்றும் பெண்களுக்கான வேலை வாய்ப்பு முகாம்கள் நடத்தப்படும் மற்றும் சிறந்த தொழில் நிறுவனங்கள் பங்கேற்க மற்றும் ஆட்சேர்ப்பு செய்ய ஊக்குவிக்கப்படும்.

2.3.2 புத்தாக்க நிறுவனங்களில் உள்ளகப்பயிற்சி (Internship) வாய்ப்புகள் வழங்க எதுவாக வேலை வாய்ப்பு முகாம்களின் ஒரு பகுதியாக ஏற்பாடு செய்யப்படும்.

2.3.3 பெண்கள் வேலை செய்யும் அனைத்து இடங்களிலும் குழந்தை காப்பக வசதிகள் கட்டாயமாக இருக்க வேண்டும்.இதுஒவ்வொரு தொழில் முனைவோரின் பொறுப்பாகும்.மேலும் இவை செயல்பாட்டில் தரமாக உள்ளதை தொழிலாளர்கள் நலன் (ம) திறன் மேம்பாட்டுத்

துறை மற்றும் சமூக நலம் (ம) மகளிர் உரிமைத் துறை இணைந்து வருடாந்திர தணிக்கை மேற்கொள்ளும்.

2.3.4 பெண்கள் பணிபுரியும் பகுதிகளில் மருத்துவ வசதிகள்/ அழைப்பின் பேரில் மருத்துவர்கள் கிடைக்க செய்வதும் மற்றும் அவ்வப்போது மருத்துவப் பரிசோதனை நடத்தப்படவும் வேண்டும்.

**அமைப்புசாரா துறை**

2.3.5 அமைப்புசாரா நிறுவனங்களில் பணிபுரியும் பெண்கள் தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு செய்யப்படுவார்கள்.அவை காப்பீடு போன்ற இதர சமூகப் பாதுகாப்பு வளையங்களை வழங்குகின்றன.

2.3.6 தொழில்சார் சுகாதாரம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர்களின் பாதுகாப்புக்கான மாநில ஒருங்கிணைப்பு மையம் (SNC-OSH) தொழில்சார் சிக்கல் ஏதேனும் ஏற்பட்டால் சுகாதாரப் பிரச்சினைகளின் தாக்கம் குறைக்கப்படுவதைஉறுதிசெய்ய இந்தத் துறையில் உள்ள பெண்கள் மற்றும் தொழில்முனைவோர்களுக்குப் பயிற்சி அளிக்கும். இது குறித்த வழக்குகளின் எண்ணிக்கை மற்றும் மேற்கொள்ளப்பட்ட தடுப்பு நடவடிக்கைகள் குறித்து பெண்களுக்கான மாநில வள ஆதார மையத்தில் தெரிவிக்கப்பட வேண்டும்.

2.3.7 தொழிற்சாலைகள்/ குறு,சிறு (ம) நடுத்தர தொழில்கள் (MSME)/ ஒப்பந்த/ வேலையை வெளியாட்களிடம் ஒப்படைக்கப்பட்ட (outsourced) தொழிலாளர்களை ஈடுபடுத்தும் அமைப்புசாரா பிரிவுகள், தொழிலாளர் உரிமைகள், ஊதிய சமத்துவம், பாலின நேச வேலைத் தளங்கள், சமூகப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு வலைகளை உள்ளடக்கிய சுரண்டல் அல்லாத நிலைமைகளை உறுதிசெய்ய அரசு தொடர்ந்து கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

## 2.4 வங்கி மற்றும் காப்பீடு

2.4.1 பெண்கள் தங்கள் சொந்த அல்லது கூட்டுப் பிணையத்துடன் கடன் பெற வங்கியை/ தனியார் நிதி நிறுவனங்களை எளிதில் அணுகுவதற்கான தடைகளை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும். கடன் பெறுவதில் குறிப்பிடத்தக்க பாலின இடைவெளியை நீக்குவதற்கான உத்தியை நிதி நிறுவனங்களுக்கு உருவாக்கி தரவும் அரசு உதவும்.

2.4.2 குறு நிறுவனங்கள் மற்றும் பெண் தொழில்முனைவோர் அல்லது 50% பெண்களைக் கொண்ட எந்தவொரு நிறுவனத்திற்கும் முன்னுரிமையுடன் வட்டி மானியத்தை அரசாங்கம் வழங்கும். எந்தவொரு முறையான நிதி நிறுவனம் மூலமாகவும் கடனாகக் கொடுக்கப்பட்ட பணத்தை வெற்றிகரமாக திருப்பிச் செலுத்திய பட்சத்தில் அத்தகைய நிறுவனங்கள் வட்டி ஏதும் செலுத்த வேண்டிய நிலை ஏற்படாது.

2.4.3 குடிப்பழக்கத்திற்கு அடிமையான ஆண்களைக் கொண்ட குடும்பங்கள் ஒரு சிறப்புத் திட்டத்தின் கீழ் காப்பீட்டுக்காகப் பரிசீலிக்கப்படும்.இது மது அருந்திய அளவிற்கு விகிதாச்சாரமாக இருக்கும் (பாட்டில்களில் இருந்து கண்காணிக்க முடியும்) தொடர்ந்து மது அருந்துவதால் அவர்களின் ஏழ்மையான நிலையில் தொடரும் குடும்பங்களுக்கு காப்பீட்டுத் தொகை பயனளிக்கும். இளைஞர்களைத் குடிபழக்கத்திலிருந்து தடுக்க, போதைக்கு அடிமையாவதைக் கண்காணிப்பதற்கு வசதியாக, வாங்குவதற்கு சட்டப்பூர்வ அடையாளச் சான்று வழங்குமாறு நுகர்வோரிடம் கேட்கப்படும். இத்திட்டத்தின் கீழ் சேகரிக்கப்படும் நிதியானது மதுவிற்கு அடிமையான மற்றும் கணவன் இறந்ததால் பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு பயன்படுத்தப்படும்.

## 2.5 வாழ்வாதாரம்

2.5.1 இயற்பொருள் சார்ந்த, சமூக மற்றும் நிதி உதவிகள் பெற்று தொழில் தொடங்குவதில் பெண்கள் சந்திக்கிற சமத்துவமற்ற நிலையை ஒழுங்கமைக்கவும் வாய்ப்புகளை உருவாக்கவும் தமிழ்நாடு அரசு கவனம் செலுத்தும்.

2.5.2 ஒரு லட்சம் பெண் தொழில்முனைவோருக்கு தொழில் வல்லுநர்களால் வழிகாட்டுதல் வழங்கப்பட்டு நடத்திட அரசு உதவி புரியும்.

2.5.3 கூட்டு நிறுவனங்களைத் தொடங்குதல் மற்றும் ஆதரிப்பதில் அரசு கவனம் செலுத்தும். இம்முயற்சி பொது நலன், பொதுவான வளத் திட்டமிடல் மற்றும் சமூக சேவைகளுக்கான மேம்படுத்தப்பட்ட அணுகுமுறை மூலம் சமுதாயத்தை அணிதிரட்டவும், அதிகாரமளிக்கவும் வாய்ப்பாக அமையும்.

2.5.4 தொலைதூரப் பகுதிகளில் வசிக்கும்/வேலை செய்யும் மற்றும் பெரும்பாலும் நிதிச் சேவைகள் மற்றும் அடிப்படைச் சேவைகளில் இருந்தும் ஒதுக்கப்பட்ட,

தாழ்த்தப்பட்ட மற்றும் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களைச் சேர்ந்த மிகவும் ஏழைப் பெண்களைச் சென்றடைவதற்கான திட்டங்களை அரசு வடிவமைத்து, அவர்கள் வறுமையிலிருந்து வெளியேற உதவும்.

2.5.5 மாநிலத்தில் விவசாயம் மற்றும் நிலம் சார்ந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள பெண்கள் கணிசமான எண்ணிக்கையில் உள்ளனர். நவீன திறன் பயிற்சி மற்றும் தொழில்நுட்பங்களை குறைந்த அளவில் வெளிப்படுத்துகின்றனர். தொழில் ரீதியாகப் பிரச்சனையைச் சமாளிக்கவும், தற்போதுள்ள வேலைகளில் செயல்திறன் மற்றும் வருவாயை அதிகரிக்கவும் பாரம்பரிய வேலைத் தொகுப்பிற்கு அப்பால் பெண்களுக்கு வேலை வாய்ப்புகளை அரசு விரிவுபடுத்தும்.

2.5.6 பெண்களுக்கான வர்த்தகச் சின்னங்களை ஆதரிப்பதற்கான தனிப்பட்ட இணையதளமுகப்பு (portal) மற்றும் இணையவழி விளம்பரம் உட்பட உருவாக்கப்படும். பெண்கள் தயாரிப்புகள் நிதி ஆதாரங்களின் பகுதியாக சேர்க்கப்படும். குறைந்தபட்சம் ரூபாய் 12.5 இலட்சம் வரை சந்தைப்படுத்துதலுக்கான கட்டண மானியங்களை மாநில அரசு வழங்கும்.

2.5.7 குறுந்தொழில்முனைவோரானபெண்களுக்கு தங்கள் வாழ்வாதாரத்தை அடுத்த கட்டத்திற்கு உயர்த்த கருத்தரங்குகள், பயிலரங்குகள், அல்லது குறுகிய பயிற்சி வகுப்புகளில் பங்கேற்பதற்கு அதிகபட்சமாக ரூ. ஒரு லட்சம் வரை ஆதரவு வழங்கப்படும். இது பயணம் அல்லது ஏதேனும் தற்செயலான செலவுகளை அனுமதிக்காது.

2.5.8 கூட்டமைப்புகள் அல்லது கூட்டுறவுகள் அல்லது கூட்டுத்தொழில்களுக்கு (Collectives) வழிகாட்டுதல் மற்றும் தொழில்நுட்ப ஆதரவுடன் ஒரு பொதுவான வர்த்தகச் சின்னம் வழங்கப்படும். பிராண்டிங், கூட்டு விநியோகச் சங்கிலி மேலாண்மை மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றுக்கான செலவு அரசாங்கத்தால் ஏற்கப்படும்.

2.5.9 சுய உதவிக் குழுக்களைப் போலவே, சக குழுக்கள் – சகாக்களிடம் (peer-to- peer)கற்றல் மற்றும் பகிர்வுகள் ஏற்படுத்தப்படும்.போட்டியில் ஈடுபடாத தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்கள் வெளிப்படையாகப் வெற்றியான தங்கள் தொழில் நடவடிக்கைகளை பகிர்ந்துகொள்ள இது உதவும்.

**2.6 புதியமுயற்சிகள்**

தொழில்மற்றம்தொடக்கம் (Startup)பெண்களுக்குஆதரவானகொள்கைகள்என்பது சமூக நிதிதிட்டங்களின் (mission)ஓர்அங்கமாகும். இந்தக்கொள்கைகள்இலாபம்சார்ந்தபுதியதொழிற்சாலைகளுக்காகதுவக்கப்பட்டாலும்செலவினஅளவிடுகளுக்குபொருந்தாது.

2.6.1 தமிழ்நாட்டில்புதியதொழில்துவங்கும்மகளிரைஊக்குவிக்கும்பொருட்டுமுதலீடுகளுக்கு,குழுவில்ஒன்றுக்குமேற்பட்டபெண்முதலீட்டாளர்களைசேர்க்கப்படுவதைஉறுதி செய்வதன்மூலம்பெண்களின்முடிவெடுக்கும்திறனைஉறுதிபடுத்துகிறது- இதன்மூலம்நிதியுதவிகோரும்மகளிருக்குஉரியபலன்கள்சென்றடையஉதவிசெய்யும்.

2.6.2 குறிப்பிட்டநேரம்சார்ந்தபணியாகஇல்லாமல்பெண்களின்வேலைத்திறன்சார்ந்ததற்கு முன்னுரிமை.

2.6.3 தொழிற்சாலைகள்அதிகமானஇடங்களிலும், நகரம்சார்ந்தபகுதிகளிலும்உள்ளசிறிய தொழிற்கூடங்கள்மற்றும்கடைகளில்பணிபுரியும்மகளிருக்கு மழலையர் பராமரிக்க (creche facilities)கூடியஅங்கன்வாடிமையசேவைகளைஅளித்தல்இதுகுறித்தான நிலையான நீடித்ததிட்டத்தைஉருவாக்குதல்.

2.6.4 எந்தநிறுவனங்களில்ஐம்பதுக்குமேற்பட்டபெண்கள்பணிபுரிகிறார்களோ,அங்கெல்லாம்குழந்தை மற்றும் பெண்கள் பராமரிப்பு அமைப்பு அமைக்க அரசு உதவிபுரியும்.

2.6.5 மகளிருக்குகட்டாயமாகவாரத்தில்இரண்டுநாட்கள்விடுப்புஅளித்தல்

2.6.6 பெண்தொழில்முனைவோர்கள்ஒருநிறுவனம்துவக்குவதில்பல்வேறுசிரமங்களை சந்திக்கின்றனர்.எனவே,இவர்களுக்குஉதவும்பொருட்டு, ஒவ்வொருமாவட்டத்திலும்மகளிருக்கானதொழில்உதவிமையம்/portal இணையமுகப்புஅழைப்புவசதி( call centre) அமைத்தல்

2.6.7 மகளிருக்கானதனியேபங்குநிதி/கடன்நிதிஅரசால்நிறுவுதல்மற்றும் தனியார்முதலீட்டாளர்கள்மூலம்பயன்படுத்துதல்.

2.6.8 அனைத்து கம்பெனி நிர்வாக சேவைகளில் Co-worker spare, incubatorsக்கு மானிய விலை நிர்ணயித்தல்

2.6.9 பெண்கள்Startupகள்எதிர்கொள்ளும் முக்கிய பிரச்சனைகளில் ஒன்று சந்தையை அணுகுதல் (market access) எனவே, அரசு சாத்தியமான விற்பவர்கள் வாங்குபவர்கள் சேவை அளிக்குமநிறுவனங்களை ஊக்குவித்தல் மற்றும் புதியசந்தை அணுகுதல் குறித்தான தளங்கள்மற்றும் புதிய இலவசதொழிற்கருவிகள் / செயலிகள் (Free tools) வழங்குதல்.

2.6.10 விரிவுபடுத்தப்பட்டதொழில்களில்ஒருசிலரேபெண்நிருவனர்களாக உள்ளனர். இதுகுறித்தானஉரியஆய்வுள்ளமேற்கொண்டுதொடர்நடவடிக்கைமேற்கொள்ளுதல்.

2.6.11 திருமணத்திற்குமுன்மூன்றாண்டுகளுக்குமேல்வேலைஅனுபவம்/startup நிறுவனத்தில் பணியில் உள்ளோருக்கு அவர்களை ஊக்குவிக்க ஊக்கத்தொகை அரசால் வழங்குதல்இத்தகையமகளிர்கணிசமானவிகிதத்தில்வேலைமற்றும் தொழில்மகளிர்திருமணத்திற்குமுன்துவங்க/பங்கேற்க உதவும்

2.6.12 கர்ப்பகாலம்மற்றும்பிரசவகாலத்தில்ஏற்படும்இடைவெளியில்தொழில்சார்ந்தசெயல்முறைகற்றல்பயிற்சி, புதுமையானபாடத்திட்டங்களைவழங்குவதன்மூலம்அவர்கள்தங்கள் துறைசார்ந்தபணியில்காலத்திற்கேற்றவாறுதொழில்நுணுக்கங்களை கற்றுக்கொண்டுமீளபணியில்அமர்வதற்குஉதவியாகஇருக்கும்.

2.6.13 மாநில/தேசிய/சர்வதேசஅளவிலானவாய்ப்புகள்பெறஅதிகபட்சநிதியுதவிஅளித்துஊக்குவிக்கப்படும்

2.6.14 வளரும்தொழிற்முனைவோருக்குஅவர்கள்சந்திக்கும்பிரச்சனைகளுக்குதிர்வுகாணும்வகையில்வழிக்காட்டுதல்வழங்கமகளிர்தொழிற் வழிகாட்டாளர்களின்சேவைஅளிக்கப்பட்டுபெண்களுக்கானபிரச்சனைகளைமுன்னிறுத்திசெயல்படும

2.6.15 சமூகதொழிலமுனைவோருக்கு அரசு உரிய ஆதரவுஅளிக்கும்

2.6.16 மகளிருக்கானதொழில்முனைவோர்புதியதொழில்தொடங்குவோர் அவர்களைசிறப்பிக்கும்பொருட்டுவருடந்தோறும்விருதுகள்வழங்கப்படும.

**2.7 பருவநிலைமாற்றம்**

2.7.1 இயற்கைபேரிடர்மேலாண்மையைஎதிர்கொள்வதுகடினமானதாகும். குறிப்பாகவெள்ளம்வறட்சிஆகியனமகளிரைமிகவும்பாதிக்கப்படையசெய்கிறது- மகளிரின்சமூகபொருளாதாரநிலையைமிகவும்மோசமானதாக்கத்தைஏற்படுததுகிறது- அரசு மகளிருக்கென பிரத்யோகமான ஒருங்கிணைந்த உத்திகளை கையாளுதல், பேரிடரிலிருந்து பெண்கள் பாதுகாப்பு, ஆரோக்கியம், மறுவாழ்வு ஆகியவற்றை அரசு உறுதிசெய்தல்

2.7.2 பருவநிலைமாற்றம், சுற்றுச்சூழல்சீர்கேடு, இடப்பெயர்வு மற்றும் இயற்கை பேரிடர் போன்றவற்றால் பெண்கள் அதிக அளவில் பாதிக்கப்படுவதால் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் மறுசீரமைப்புக்கான கொள்கைகள் மற்றும் திட்டங்கள் பாலினபாகுபாடற்ற செயல்பாடுகளைகொண்டிருக்கவேண்டும்.பேரிடர்மறுசிரமைப்புஉதவிபெட்டகத்தில்பெண்களுக்கானபிரத்யேகமானசுகாதாரபொருட்கள் வழங்குதல், முகாம்களில் பெண்களுக்கான தனிகழிப்பறைகள், புணர்வாழ்வுநடவடிக்கைகள்உள்ளுர்தேவைகளுக்கேற்பவழங்குதல்

2.7.3 இயற்கைவளங்களின்மீதுசமஉரிமை,கட்டுப்பாடுமற்றும்பயன்பாடுமற்றும்வறுமைமற்றும்பருவநிலைதாக்கங்களைஎதிர்கொள்ளவும்நலிவுற்றஏழைபெண்களின்உடமைகள்மற்றும்சொத்துககளைபாதுகாப்பதற்கானவழிமுறைகள்அரசுஏற்படுத்தும்.

2.7.4 பெண்களின்சுகாதாரம்மற்றும்சுற்றுச்சூழலைபாதுகாக்கும்பொருட்டுதவறானபயிர்த்தேர்வு,, இரசாயனங்கள் மற்றும் பூச்சுக்கொல்லிமருந்துகள் உபயோகித்தலை ஒட்டுமொத்தமாக தடுக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். பெண்களுக்கு இயற்கை வழி விவசாயத்தை (organic farming) மேம்படுத்துவதற்காக உள்ளீடு உற்பத்தி மற்றும் அதன் மேலாண்மை குறித்த பயிற்சிகளை வழங்குதல்

2.7.5 கிராமப்புறமக்களுக்கானஅன்றாடசெயல்பாடுகளுக்குபோதுமான சுற்றுச்சூழல்நேயமிக்க, புதுப்பிக்கதக்கமரபு சாரா எரிசக்தி, பசுமை எரிசக்தி ஆதாரங்களை உற்பத்தி மற்றும் எளிதில் கிடைக்கும் வகையில் ஊக்குவிக்க நடவடிக்கைமேற்கொள்ளப்படும்.

2.7.6 நவீனமயமாக்கப்பட்டமின்சேமிப்புபெட்டிகள், சூரியஒளி மின்உலர்த்திகள் ,

உணவுபதப்படுத்தும்தொழில்நுட்பத்தைபெண்விவசாயிகள் மற்றும் மீனவத்தொழிலில் உள்ள மகளிருக்கு வழங்குதல் மூலம்பெண்களின் பணிச்சுமையை குறைக்கப்படும்.

2.7.7 குறைந்தப்பட்சம்5% குறுதொழில் நிறுவனங்கள் சுற்றுச்சூழல் நேயதொழில் நுட்பத்தில் இயங்கவேண்டும்.

2.7.8 பருவநிலைமாற்றங்களை எதிர்கொள்ளவும் அதற்கேற்றாற்போல் தங்களின் திறமைகளை மேம்படுத்திகொள்ளவும். அனைத்து மகளிர் சுயஉதவிக்குழு உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்பிரதிநிதிகள் ஆகியோருக்கு தொடர்ச்சியான விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

3. அரசியல்

ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தேதீர்வோம் என்ற முனைப்புடன் அரசுஉறுதிபூண்டுள்ளது- அதன்படி பெண்களுக்கு சமூக அரசியல்பொருளாதாரம்,
கலாச்சாரம்மற்றும்சொத்துக்களில்சமஉரிமைஆகியவற்றைஉறுதி செய்யும்பாலினநடுநிலையானசமூகத்தைஇவ்வரசுஉருவாக்கும்
ஆணாதிக்க சமூகத்தில் பெண்களுக்கு அரசியல் அதிகாரம் அளித்தல் அவசியமானதாகும் மற்றும் சமூக அரசியல் பொருளாதார கலாச்சாரநிறுவனங்களை சமத்துவ உணர்வுடன் செயல்பட நவீனபடுத்தும் முயற்சிகள்எடுக்கப்படும்.
சமூகநீதியின் இலட்சியங்கள் என்பது ஒடுக்கப்பட்ட மக்களுக்கு சட்டமன்ற அமைப்புகளில் இடஒதுக்கீடு அளிப்பதுமட்டுமல்ல. பாலினசமத்துவம், சுதந்திரம் ஆகியவை சமூகநீதியில் பரந்தகட்டமைப்பில் கவனிக்கவேண்டிய இனங்களாகும். அரசியல்பங்கேற்பு அரசியல் ஈடுபாடு மற்றும் அரசியல் பிரதிநிதித்துவம் ஆகியனஅவர்களின்விருப்பத்திற்கேற்றவாறு வாய்ப்பளிக்கும்பட்சத்தில் அரசியல்மாற்றம் தவிர்க்க இயலாதமாற்றமாக உருவாகும்.

3.1.1 பதிவுசெய்யப்பட்டஅரசியல்கட்சிகள்பெண்களுக்கான 33.3%

பிரதிநிதித்துவத்தைஅனைத்துவகையிலும்வழங்கவேண்டும்.

3.1..2 மாநில உள்ளாட்சி அமைப்புகளில் பெண்களுக்கு ஏற்கனவே 50 % வழங்கப்பட்டுள்ள நிலையில் பெண்களுக்கான33.3% இடஒதுக்கீட்டை

சட்டமன்ற, பாராளுமன்ற தேர்தலில் பங்கேற்க உறுதி செய்தல் வேண்டும்.

3.1..3 பெண்களுக்கு அரசியல் குறித்த படிப்பும் 6 மாதகால சான்றிதழ் 3 மாதகால உள்ளாட்சி அமைப்புகளில் பயிற்சியும் வழங்கினால் பெண்கள் அதிகஅளவில் அரசியலில் நுழைவதற்கும் அவர்களிடம் எதிர்பார்க்கப்படும் பணிப்பொறுப்புகள் குறித்தவிழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.
பெண்கள்அரசியல்பங்கெடுக்கவிரும்பும்சூழல்உருவாக்கப்படும்.

இவ்வாறானபயிற்சிபெண்கள்அரசியல்களத்தில்சவால்களைசமாளிக்கமுழுமையானதகுதிபடைத்தவர்களாகஆக்கும்.

3.1.4 மேலும் இப்பயிற்சியானது தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளான பெண்கள் தங்கள் பணிபொறுப்புகள் கையாள்வதில் தன்குடும்ப ஆண் நபர்களை சார்ந்திராமல் தன்னிச்சையாகவும் சுதந்திரமாகவும் செயல்பட அனுமதிக்கும். மேலும், முழுமையான தகுதி பெற்றவராக செயல்பட வழிவகுக்கும்.

3.1.5
தேர்ந்தெடுக்கப்பட்டஉள்ளாட்சிபெண்பிரதிநிதிகளைமாநிலமற்றும்வெளிமாநிலங்களிலும் பயணம் மேற்கொண்டு அங்கு அளிக்கப்படும் புதுமையான உத்திகளை கையாள வழிவகை செய்யும்.

3.1.6
தேர்ந்தெடுக்கப்பட்டபெண்பிரதிநிதிகளைஅவர்கள்கடமையாற்றஉறுதுணையானபணிச்சூழலைஉருவாக்கவேண்டும்.

3.1.7 பெண் அரசியல் பிரதிநிதிகள் குறிப்பாக பின்தங்கிய பிரிவைச்சேர்ந்தவர்கள் உடல், உளவியல் மற்றும் சமூகப்பாகுபாடுகளால் பாதிக்கப்படும்போது அவர்களுக்கு முன்னுரிமை அளித்து மாவட்ட நிர்வாகத்தால் உடன் உரிய பாதுகாப்பு வழங்கப்படும்.

3.1.8 பாலின சமத்துவம் மற்றும் மனித உரிமைகள் குறித்து அனைத்து தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அலுவலர்களுக்கு பெண்உரிமை அமைப்புகள் மற்றும் ஐக்கியநாடு அமைப்புகள் மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

3.1.9 நிலைத்த நீடித்த வளர்ச்சியில் 5 வது குறிக்கோளான பாலின சமத்துவத்தை உருவாக்குவதில் மக்களாய் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைத்து பிரதிநிதிகளையும் பங்கேற்க ஊக்குவிக்கப்படும். பாலின சமத்துவம் மற்றும் பாலின நேயகட்டமைப்புகளை அனைத்து உள்ளாட்சி அலுவலங்களிலும் ஏற்படுத்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

3.1.10 சமூக மற்றும் சொந்த பகைமை அதிகமாக உள்ள பாதுகாப்பற்ற சூழலில் இயங்கும் உள்ளாட்சி பிரிதிநிதித்துவ கூட்டங்களில் வெளிப்படைத்தன்மை பாதுகாப்பு மற்றும் திறமையான செயல்பாடுகளை ஊக்குவிக்க மின்னணுகருவிகள் மூலம் கூட்ட நிகழ்வுகள் பகிரப்படும். இவ்வாறான பாதுகாப்பான கூட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்உறுப்பினர்களின் பாதுகாப்பு, பயமற்றதன்மை மற்றும் தன்னம்பிக்கையுடன் கடமையாற்ற வழிவகுக்கும்.

4. **மனவளம் (Emotional)**

இக்கொள்கைஉணர்வுரீதியானஅதிகாரப்பகிர்வைஉள்ளடக்கியது- இதுமகளிர்சுதந்திரம் , முடிவெடுக்கும் தன்மை, நேர்மறைஎண்ணங்கள், சுயவளர்ச்சி, தனது வாழ்க்கையை பழமையான பெண்ணிய கருத்துகளான குடுமபத்திற்கும், சமுதாயத்திற்கும் கட்டுப்பட்டு சூழ்நிலை கைதியாக அல்லாமல் தனித்துவம் நிறைந்து தன் சுயவிருப்பத்தை நிறைவேற்றும் விதமாக நடந்துகொள்ளுதல்.

4.1 மனஆரோக்கியம் என்பது அதிகபட்ச பாலின பிரச்சனை ஆகும். குறிப்பாக மனச்சோர்வு என்பது மற்றவர்களைவிட ஏழை மகளிரிடையே அதிகப்படியாக காணப்படுகிறது- சமூக அமைப்புகள் மாவட்ட மனநலதிட்டத்துடன் இணைந்து இதற்கான திட்டங்களை முன்னெடுத்து செல்லவேண்டும்.இதற்கான உரியவழிமுறைகளை தேவையான மருத்துவபரிசோதனை, பராமரிப்பு மற்றும் உரிய மருத்துவ சிகிச்சை வசதிகளை பஞ்சாயத்து அளவில் உள்ளாட்சி அமைப்புகளுடனும் சமூக அமைப்புகளுடனும் ஒருங்கிணைத்துஅரசு செயல்படுத்தவேண்டும்.

4.2அரசு ஆரம்ப சுகாதார நிலையதரத்தினை மற்றும் சேவையைஉயர்த்தி, மனஆரோக்கிய பிறழ்தல்மூலம்ஏற்படும்குடும்பவன்முறை, பாலியல்வன்முறை,

மனஅழுத்தம்
போன்றவைகளைகண்டறிந்துசிகிச்சைஅளிக்கவழிவகைசெய்தல்.

ஆரம்ப சுகாதார பணியாளர்களுக்கு பாலியல் துன்புறுத்தல்கள் குறித்தும் உடனடியாக முதல் தகவலினை சம்மந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு தெரிவிக்கவும் பயிற்சிஅளிக்கப்படும்.

4.3 சுயஉதவிக்குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் வாழ்க்கைத்திறன் பயிற்சியுடன் முக்கியமாக முடிவெடுத்தல், தகவல்தொடர்புதிறன், தைரியமாக செயல்படுதல், நேர்மறை சுயவளர்ச்சி போன்றவை வழங்கப்படுகின்றன. இதுவரை எவ்வித பயிற்சியும் பெறாத மகளிர் மற்றும் வளரிளம் பெண்களுக்கு உரியபயிற்சிகள் அளிக்கப்பட்டு பல்வேறு தகுதியான திறன்மேம்பாட்டு திட்டங்கள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தப்படும்.

5. **ஆதரவுஅளித்தல்**

**5.1** மகளிருக்கான பிரத்யேக இணையதளம் துவக்கி அதில் கல்வி, உதவித்தொகை, திறன்பயிற்சி மற்றும் பணி அமர்த்துதுல், வேலைவாய்ப்புகள், வழிகாட்டுநர்கள், சலுகைகள், பல்வேறு அரசு நலத்திட்டங்களை பதிவேற்றுதல்.

5.2 **‘பெண்ணே உனக்காக’** என்ற செயலியினை பயன்படுத்தி பெண்குழந்தைகளுக்கு வாழ்க்கைச் சுழற்சி முறை குறித்தான தகவல்கள் வழங்குதல். பெண்குழந்தைகள் மருத்துவமனையில் பிறந்தநாள் முதல் உரிய தகவல்கள் திட்ட உள்ளீடுகள் மூலம் கண்காணிக்கமுடியும்.பெண்குழந்தைகளை உரிய திட்டங்கள் மூலம்ஒருங்கிணைக்கவும்,
இதன்மூலம்பெண்குழந்தைகளின்பாதுகாப்பிற்கும் வழிவகை செய்ய முடியும்.

5.3 Gen –O என்ற பாலின கண்காணிப்பு மையம் அமைக்கப்பட்டு அதனிடம் பாலினம் தொடர்பான பல்வேறு ஆராய்ச்சி மையங்கள், கல்விநிறுவனங்கள், அரசுதுறைகள், பாலின வரவு செலவுத்திட்டம், பாலின பகுப்பாய்வு, பாலின ஆய்வுக்கூடம் போன்ற ஆராய்ச்சி களஞ்சியத்தை பராமரிக்கும் பொறுப்பினை வழங்கப்படும். Orange lens குறித்தான செயல்முறைத் திட்டத்தினை இந்த Gen –O மூலம் கண்காணிக்கப்படும்,

6. **ஆராய்ச்சி, கண்காணித்தல்மற்றும்மதிப்பிடுதல்**

இக்கொள்கையின்செயல்பாடுகளை உரியமுறையில் தொடர்ச்சியாக கண்காணிக்கப்படும். ஒவ்வொரு திட்ட உத்திகளும் செயலாக்க குறியீடுகளாக மாற்றி அமைத்து அதனை மதிப்பீடு செய்து, தீவிரமாகதொடர்நடவடிக்கைமேற்கொள்ளுதல்.

6.1 உயர்நிலை மகளிர் உரிமைக்குழு அமைத்து இக்கொள்கையின் செயல்பாடுகள் ண்காணிக்கப்படும். அதன் உறுப்பினர்கள்பின்வருமாறு

1. தலைமைச்செயலாளர், தமிழ்நாடுஅரசு, குழுத்தலைவர்

2. அரசுசெயலாளர், சமூகநலன்மற்றும்மகளிர்உரிமைத்துறைஒருங்கிணைப்பாளர் (Convenor)

3. அரசுசெயலாளர், நிதித்துறை, உறுப்பினர்

4. அரசுசெயலாளர், ஊரகவளர்ச்சிமற்றும்உள்ளாட்சித்துறை, உறுப்பினர்

5. அரசுசெயலாளர், நகராட்சிநிர்வாகம்மற்றும்குடிநீர்வழஙகல்துறை

6. அரசுசெயலாளர், மக்கள்நல்வாழ்வுத்துறை, உறுப்பினர்

7.அரசுகூடுதல்தலைமைச்செயலாளர் ,திட்டம்வளர்ச்சிமற்றும்சிறப்புவளர்ச்சித்துறை, உறுப்பினர்

8.அரசுசெயலாளர், தொழிலாளர்நலன்மற்றும்திறன்மேம்பாட்டுத்துறை, உறுப்பினர்

9. அரசுசெயலாளர், சிறுமற்றும்குறுதொழில்நிறுவனங்கள்துறை, உறுப்பினர்

10.கூடுதல்காவல்துறைஇயக்குனர் (ADGP), உறுப்பினர்

11.UN Women, உறுப்பினர்

12. UNICEF ஐக்கியநாடுகளின்குழ்ந்தைகள்நிதியம், உறுப்பினர்

13. The World Bank, உறுப்பினர்

14. இயக்குனர், சமூகநலன்மற்றும்மகளிர்உரிமைத்துறை, உறுப்பினர்செயலர்

15. இயக்குனர், ஒருங்கிணைந்தகுழ்ந்தைவளர்ச்சிப்பணிகள், உறுப்பினர்

16. மாநிலஅளவிலானவங்கியாளர்கள்குழு (SLBC), உறுப்பினர்.

இந்தஉயர்நிலைமகளிர்உரிமைக்குழு 6 மாதங்களுக்கு ஒருமுறை கூடி, திட்ட செயல்பாடுகளை ஆய்வு செய்து, இடைக்காலதிட்ட மதிப்பீட்டின்படி ஆலோசனைகள் வழங்கி, ஆய்வு மேற்கொள்ள வேண்டிய இனங்களை கண்டறிந்து/மதிப்பீடு செய்யும் பணிகளை மேற்கொள்ளும்.

வருடாந்திர செயல்திட்ட அறிக்கையினை உயர்நிலை மகளிர் உரிமைக்குழுவிற்கு சமர்ப்பித்தல்.

6.2 **மதிப்பிடுதல்**

கொள்கையின்செயல்பாடுகளைமூன்றாம்நிறுவனம்மூலம்தொடர் மதிப்பீடுஅறிக்கைகளைஉயர்மட்டமகளிர்உரிமைக்குழுகூட்டங்களில்கலந்தாலோசித்தல்.

6.3 **தரவு, நிதி, கொள்கைரீதியானஆராய்ச்சி**

6.3.1 பெண்கள்குறித்தஆய்வுகள்மற்றும்மகளிருக்கானதலைப்புகளில்தரவுகள் உருவாக்கப்படும்.பொருளாதாரமற்றும்புள்ளியியல்துறையானதுபாலின வாரியாகபிரிக்கப்பட்டவிவாதத்தரவுகளைஆண்டுதோறும்வழங்குதல்.அரசுதுறைகள், பொதுதுறைபிரிவுகள், தனியார்துறைமற்றும்அனைத்துமாவட்டங்களிலும்பாலினவரவுசெலவுத்திட்டம்அறிமுகப்படுத்தப்பட்டுமாநிலமகளிர்கொள்கையைகடைபிடிக்க வலியுறுத்தவேண்டும்.

6.3.2 மாநிலவரவுசெலவுத்திட்டமுன்மொழிவிற்குமுன், ஒவ்வொருதுறையிலும்பாலினவரவுசெலவுத்திட்டக்கண்காணிப்புக்குழுவின்மூலம்பாலினஅடிப்படையிலானதிட்டங்களின்சூழ்நிலைபகுப்பாய்வினைசெய்துநிதித்துறைபிரிவிற்குசமர்ப்பிக்கும். அனைத்துதிட்டங்களையும்/முன்மொழியப்பட்டதிட்டங்களையும்/ நடப்பில்உள்ளதிட்டங்களையும்செயல்படுத்துவதற்குமுன்னரேபாலினகண்ணோட்டம்/ Orange Lens கொண்டுமதிப்பீடுசெய்யப்படவேண்டும்.

6.3.3
பாகுபாடுமற்றும்வன்முறையிலிருந்துபெண்களைபாதுகாப்பதைநோக்க மாககொண்டதிட்டங்களுக்குகுறிப்பாகஅரசுநிதிஒதுக்கீடுசெய்தல்.

6.3.4
பெண்கள்மேம்பாட்டுவங்கி/கவுன்சில்துவக்குவதற்கானசாத்தியக்கூறுக ள்குறித்துஆய்வுமேற்கொள்ளப்படும்.
இதன்மூலம்பெண்கள்பொருளாதாரமேம்பாடுஅடைந்து,
அரசியல்களத்தில்பிரதிபலித்தல்.

6.3.5
பதிவுசெய்தல்மற்றும்பிரச்சனைகளைமதிப்பீடுசெய்துஆதாரபூர்வமான திட்டங்களைவகுத்துசமூகத்தில்உள்ளசெயல்பாடுகளை ஆதரவு அளித்தல், கற்றல் மற்றும் அறிவு சார்ந்த விவரங்களை பகிர்தல், அனைத்து துறைகளிலும் அனைத்து கொள்கைகளும் திட்டங்களும் பாலின கண்ணோட்டத்துடன் ஆய்வு செய்து அவற்றை பாலின கருத்துகளை கண்டுகொள்ளதவை, பாலின பாகுபாடுகளை கண்டறிதல், பாலினத்தினை சமமாக கருதுதல் மற்றும் பாலின கருத்துகள் குறித்த மாற்றங்கள் என வகைப்படுத்துதல்.

விரிவான கொள்கை செயல்பாடுகள் வழிமுறைகள் மற்றும் அதுகுறித்த நிதிஒதுக்கீடு உரியதுறையினர்மூலம்வழங்கப்படும். குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் கொள்கையின் இலக்குகள் அடைதலுக்கு அத்துறையினரே பொறுப்பாளர்கள் ஆவார்.

முடிவுரை

இந்தக் கொள்கையானது அறிவிக்கப்பட்டதிலிருந்து 10 ஆண்டுகளுக்குள் அல்லது புதிய கொள்கை உருவாக்கப்படும் வரை நடைமுறையில் இருக்கும். எல்லாவற்றினும் இந்தக்கொள்கையில் ஏற்கெனவே உள்ள பயனாளிகளைப் பாதிக்காதவகையில் அமைச்சரவையின் ஒப்புதலுடன் இந்தக் கொள்கையில் உரிய திருத்தங்கள் மேற்கொள்ளப்படலாம் இந்தக் கொள்கை 5 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் ஆய்வு செய்யப்படும்.

**கொள்கைஉருவாக்கப்பிண்ணனி**

சமூகநலம்மற்றும்சத்துணவுத்திட்டத்துறையானதுபாலினசமத்துவத்தைவலியுறுத்தும்வகையில்தற்போதுசமூகநலன்மற்றும்மகளிர்உரிமைத்துறையாகபெயர்மாற்றப்பட்டுஉள்ளது-
இந்தக்கொள்கையானதுபல்வேறுநிலையில், மாநில, மண்டல, மாவட்டஅளவில்பலகருத்துப்பரிமாற்றகூட்டங்கள்நடத்தப்பட்டன. இதில்சமூகஅமைப்புகள், கல்வியாளர்கள், ஆராய்ச்சிநிறுவனபிரதிநிதிகள், சுயஉதவிக்குழுக்கள், அரசியல்அமைப்பைச்சார்ந்தபிரதிநிதிகள்போன்றோர்கலந்துகொண்டனர்.

சிறப்பினமாக, பன்னாட்டுஅமைப்புகளான UNICEF, UN Women, World Bank போன்றவல்லுநர்களுடன்கலந்தாய்வுமேற்கொள்ளப்பட்டது.

சென்னையில் இரண்டு இடங்களிலும், மதுரைமற்றும்கோயம்புத்தூர் ஆகிய இரண்டு இடங்களில் மண்டலஅளவிலானகூட்டம்நடைபெற்றது- சமூகத்தில் உள்ள அனைத்து தரப்புபிரதிநிதிகள் பங்கேற்பதை உறுதிசெய்யப்பட்டது. அரசுதிட்டசெயலாக்கத்தின்போது அனைத்துதிட்டங்களுடன் ஒருங்கிணைந்து, பன்முகஉத்திகளைகையாண்டு, திட்டசெயலாக்க உள்ளீடுகளை தனிநபர், இரண்டு மற்றும் அதற்கு மேற்பட்ட தரப்பினரிடயே இணைந்து சமூகம் சார்ந்த அமைப்புகள்அளவில்நிலைத்தவளர்ச்சியினைஅடையஅரசுதற்போதுள்ள சுகாதாரம், வளர்ச்சி மற்றும் இதர திட்டங்களுடன் இணைந்து செயல்படுதல்.

*Annexure 2*

## Landscape at a glance

- Women who are literate(%) 84.0 (2020-21, NFHS- 5),
- Men who are literate (%) 90.7(2020-21, NFHS- 5)
- Women with 10 or more years of schooling (%) 56.6(2020-21, NFHS- 5)
- Men with 10 or more years of schooling (%) 59.1(2020-21, NFHS- 5)
- Women who have ever used the internet (%) 46.9(2020-21, NFHS- 5)
- Women aged 20-24 years married before age 1 8 years (%) 12.8(2020-21, NFHS- 5)
- All women age 15-49 years who are anaemic(%) 53.4(2020-21, NFHS- 5)
- All women age 15-19 years who are anaemic (%) 52.9(2020-21, NFHS- 5)
- Women who worked in the last 12 months and paid in cash (%) 40.8
- Women owning a house and/or land (alone /jointly with others) (%) 47.9
- Women having a bank or savings account they themselves use (%) 92.2
- Women having a mobile phone they themselves use (%) 74.6

## SOME VITAL GENDER RELATED DATA

| S.No | Indicators | 2019 – 2020 | Source |
|---|---|---|---|
| 1 | Rate of Crimes against women per every100000 female populations | 14.6 | SCRB |
| 2 | Conviction rate of crime against Women | 18.3 | SCRB |
| 4. | Per Lakh women that have been subjected to dowry offences during the year | 4.5 | SCRB |
| 5. | Conviction rate of women subject to dowry related offences. | 7.7 | SCRB |
| 6. | Sex Ratio at Birth (females per 1000males) | 942 | DPH |
| 7. | Female to male ratio of average wages/salary earning received during the preceding calendar month among regular wage salaried employees (rural +urban) | 0.74 | PLFS |
| 9. | Proportion of crime against women to total crime reported in the country during the calendar year | 1.3 | SCRB |
| 10. | Per Lakh women who have experienced sexual crime during the year (in %) | 19.9 | SCRB |
| 11. | Per Lakh women who have experienced cruelty/Physical violence by husband or her relatives during the calendar year (%) | 13.20 | SCRB |
| 12. | Conviction rate of cruelty by husband or his relatives | 9.4 | SCRB |
| 13. | Proportion of sexual crime against girls, children to total crime against children during the calendar year | 57.3 | SCRB |
| 14. | Proportion of Trafficking of girl children to total children trafficked during the calendar year | 51 | SCRB |
| 15. | Child Sex Ratio (0-6 years) 2011 (per 1000 male births) | 943 | DPH |
| 16. | Proportion of cases reported under the Prohibition of Child Marriage Act (early marriage of children below 18 years of age)total crime against children, 2015 | 1.1 | SCRB |
| 17. | Conviction rate of cases reported under prohibition of child marriage act | 0 | SCRB |
| 18. | Ensure women's full and effective participation and equal opportunities for leadership at all levels of decision-making in political, economic and public life | - | - |
| 19. | Proportion of seats held by women in national Parliament, State Legislation and Local Self Government – (Assembly) | 9.33 | State Election |
| 20. | Proportion of seats held by women in national Parliament, State Legislation and Local Self Government – (PRI) | 52.99 | |
| 21. | Proportion of seatsheld by women innationalParliament,State Legislation andLocal Self Government – (Lok sabha) | 7.89 | ECI |
| 22. | Proportion of seats held by women in national Parliament, State Legislation and Local Self government – (Rajya sabha) | 11.1 | ECI |
| 23. | Female labour force participation rate (LFPR)-Urban areas - (4th Quarter) | 24.2 | PFLS |
| 24. | Percentage of currently married women(15-49 years) who use modern methods of family planning | 68.8 | DFW |
| 25. | Operational land holdings – **Female (Area in '000Hectares)** | 1036.2 | Agri Census |
| 26. | Operational land holdings - **Female -Number of holdings (In lakh numbers)** | 15.60 | Agri Census |
| 27. | Agricultural wages (genderwise) –**Female** | 254 | DOES |
| 28. | Agricultural wages (genderwise) –**Male** | 277 | DOES |
| 29. | Exclusive Women SHGs in Bank linked SHGs (in lakhs) | 7.66 | TNDCW |
| 30. | Percentage of women employed in IT and ITeS industry, 2017-18 | 35 | TNeGA |
| 31. | Maternal Mortality Ratio GOI | 60 | SRS |

| | | | |
|---|---|---|---|
| **32.** | Maternal Mortality Ratio (State) | 57 | HMIS |
| **33.** | Percentage of women aged15 - 49 years who received antenatal care, four times or more (Period 5 years/1 year) – ( Central) | 81.1 | NFHS |
| **34.** | Percentage of women aged15 - 49 years who received antenatal care, four times or more (Period 5 years/1 year) – ( State) | 85.49 | TN HMIS |
| **35.** | Percentage of currently married women (15-49 years) who use any modern family planning methods – **(GOI)** | 52.6 | NFHS |
| **36.** | Percentage of currently married women (15-49 years) who use any modern family planning methods -**( State)** | - | DFW |
| **37.** | Percentage of women aged 15-19years who were already mothers or pregnant. – **(Central)** | 5 | SRS |
| **38.** | Percentage of women aged 15-19years who were already mothers or pregnant. – **(State)** | 1.16 | TNHMIS |
| **39.** | Percentage of Institutional Births(5 years/1 years). – **(Central)** | 98.9 | NFHS |
| **40.** | Percentage of Institutional Births(5 years/1 years). – **(State)** | 99.94 | TNHMIS |
| **41.** | Percentage of currently married women (15-49 years) who use any modern family planning methods – **(Central)** | 52.6 | NFHS |
| **42.** | Percentage of currently married women (15-49 years) who use any modern family planning methods – **(State)** | - | DFW |
| **43.** | Percentage of TB cases successfully treated(cured plus treatment completed) among TB cases notified to the national health authorities during a specified period | - | RNTCP |
| **44.** | Percentage of people living with HIV currently receiving ART among the detected number of adults and children living with HIV | 86 | TANSACS |
| **45.** | Proportion of patients in the target age group(>30 years) in the community who are taking anti-Hypertensive medications in Government Health facilities. | 1.7 | NHM |
| **46.** | Percentage of population in the age group 15-49 who reported sought treatment out of total population in that age group having diabetes. | 0.9 | NHM |
| **47.** | Proportion of patient in the target age group (>30 years) in the community who had been screened for Cervical Cancer atleast once in last three years in Government Health facilities. | 40 | TNHMIS |
| **48.** | Total physicians, nurses and midwives sanctioned in public sector facilities per 10000population | - | - |
| **49.** | significantly reduce all forms of violence and related death rates everywhere | 2.2 | SCRB |
| **50.** | Per One lakh population subjected to Physical, Psychological, or sexual violence in previous12 months | 1.4 | SCRB |
| **51.** | Crime rate of sexual assault on women per lakh population | 1.4 | SCRB |
| **52.** | Conviction rate of reported Murder | 29 | SCRB |

INVESTING TOGETHER IN BUILDING A FUTURE WE WANT

வன்முறைஇல்லாதகூடுகள்

**தொல்லைகள்இன்மை**

**பாதுகாப்பானகுடியுருப்பு**

**வாழ்வதற்கானஉரிமை**

**மரியாதை**

பசியின்மை

**சமஊதியம்**

பாகுபாடுஇன்மை

lர்

**சமுகநலன்மற்றும்மகளிர்உரிமைத்து றை**

**தமிழ்நாடுஅரசு**

**3வது தளம், நாமக்கல்கவிஞுமாளிகை,**

**தலைமைச்செயலகம்,**

**சென்னை.09**